Registered as a Newspaper

பக்கங்கள் 16

விலை ரூ. 50

# உதயன்

சுடர் : 38
கதிர் : 236

வியாழக்கிழமை 20 ஜூலை 2023

ஆடி 04 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054



## வவுனியா நகரில் தீ விபத்து

வவு., ஜூலை 20
வவுனியா நகரில் உள்ள உணவகம் ஒன்றில் நேற்று இரவு தீ விபத்து ஏற்பட்டுள்ளது. அதில் உணவகம் பகுதியளவில் சேதமடைந்துள்ளது. நேற்று இரவு 8.25 மணியளவில் இந்தச் சம்பவம் நடந்துள்ளது. வவுனியா நகர சபைத் தீயணைப்புப் பிரிவினருக்குத் »15

## எழுந்தது விமானம் பறந்தன கூரைகள்

கொழும்பு, ஜூலை 20
கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க வந்த விமானம் ஒன்று திடீரென மீண்டும் மேலே உயர்த்தப்பட்டதால் விமான நிலையத்துக்கு அருகில் இருந்த வீடுகள் மற்றும் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது. இந்தச் »15



# குருந்தூர்மலைக் காணிகளை தமிழருக்கு வழங்கக்கூடாது

## முன்னாள் இராணுவத்தளபதி ஜெகத் டயஸ் மனுத்தாக்கல்

**யாழ்ப்பாணம், ஜூலை 20**

**குருந்தூர்மலையைச் சுற்றியுள்ள காணிகளை தமிழ் மக்களுக்கு வழங்கக்கூடாது என்று கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னாள் இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெகத் டயஸ் மனுத்தாக்கல் செய்துள்ளார். இந்த மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.** »15

## தனியார் பஸ் மீது தாக்குதல்

யாழ்., ஜூலை 20
மானிப்பாய்-காரைநகர் வழித்தட சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஒன்றின் மீதும், அதன் சாரதி, நடத்துநர் மீதும் நேற்று இரவு »15

## இலங்கைக்கு 'ஜி.எஸ்.பி. பிளஸ்' ஐரோப்பிய ஒன்றியம் நீடிப்பு

கொழும்பு, ஜூலை 20
ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை 2027 ஆம் ஆண்டு டிசெம்பர் 31ஆம் திகதிவரை மேலும் 4 ஆண்டுகளுக்கு நீடிக்க ஐரோப்பிய ஆணைக்குழு நேற்றுத் தீர்மானித்துள்ளது. »15

## '13' என்னும் வலைக்குள் சிக்கக்கூடாது இந்தியா

### நாடு கடந்த தமிழீழ அரசு நரேந்திர மோடிக்கு கடிதம்

கொழும்பு, ஜூலை 20
சர்வதேச ஆதரவுடன் வாக்கெடுப்பு நடத்தி தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு »15

## சமூகச் சீரழிவு இடமாக மாறிய யாழ்.கோட்டை!

யாழ்ப்பாணம், ஜூலை 20
யாழ்ப்பாணம், கோட்டைப் பகுதி சமூகச் சீரழிவுச் செயற்பாடுகளுக்கான இடமாக மாறியுள்ளது என பொதுமக்கள் விசனிக்கின்றனர். போதைப்பொருள் பாவனையும் அமோகமாக நடக்கின்றது என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

விரிவு - பக்.6

## எதிர்ப்பின்றி நிறைவேறியது ஊழல் எதிர்ப்புச் சட்டம்

கொழும்பு, ஜூலை 20
ஊழல் எதிர்ப்புச் சட்டம் நாடாளுமன்றத்தில் நேற்று வாக்கெடுப்பு இன்றித் திருத்தங் »15

## பொலிஸுக்கு எதிரான மனு உயர்நீதிமன்றால் தள்ளுபடி

விரிவு:- பக்.15

வடக்கில்

## போதைப் பாவனையால் இளவயதில் மாரடைப்பு!

யாழ்ப்பாணம், ஜூலை 20
மதுப் பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனையால் வடக்கில் இளையோர்கள் மத்தியில் மாரடைப்பு, பக்கவாதம் ஏற்படுகின்றமை அதிகரித்துள்ளது.

விரிவு - பக்.03

## மருத்துவமனை மரணங்கள் எப்போதும் நடப்பவைதான்!

### சுகாதார அமைச்சர் திமிர்த்தனம்

கொழும்பு, ஜூலை 20
மருத்துவமனைக்குச் செல்லும் அனைவரும் குணமடைய மாட்டார்கள். அதனால்தான் மருத்துவமனைகளுக்கு அருகில் மலர்ச்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்துள்ளார் சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல.
நாட்டில் அண்மைய நாள்களில் மருத்துவமனைகளில் »15

உங்களுக்காக கவர்ச்சியானதொரு நிகரற்ற தீர்வு

விரைவில்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org









# அடாவடி அரசியலை உடன் கைவிடுங்கள்

## சரத் வீரசேகர தரப்பினருக்கு சுரேஷ் பிரேமச்சந்திரன் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜுலை 20**

**நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவின் அண்மைய நாடாளுமன்ற உரை இலங்கை நீதித்துறை சிங்கள - பௌத்த மேலாதிக்க சக்திகளால் செல்வாக்கு செலுத்தப்படுகின்றதா? என்கிற தமிழ் மக்களின் சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகிறது என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவருமான சுரேஷ் க.பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நாடாளுமன்ற சிறப்புரிமைகளைப் பாவித்து சரத்வீரசேகர கூறிய கருத்துகள் நீதித்துறையை இன ரீதியாகப் பிளவுபடுத்தும் ஒரு முயற்சியாக அமைந்திருக்கிறதா என்று எண்ணத்தோன்றுகின்றது. இலங்கை நீதித்துறை என்பது நீண்டகாலமாக மிகப்பெருமளவில் அரசியல் மயப்படுத்தப்பட்டிருக்கின்றது. தமிழ் மக்கள் மீது நடத்தப்பட்ட பல்வேறுபட்ட தாக்குதல்கள் தொடர்பாக தமிழ் மக்களுக்கு இலங்கை நீதித்துறையால் நீதி கிடைக்கவில்லை.

இதனை மாற்றி இலங்கை நீதித்துறையை சுதந்திரமாக இயங்க விடுவதென்பதற்குப் பதிலாக நீதித்துறையிலிருக்கும் தமிழ் நீதிபதிகளை மிரட்டும் பாணியில் பேசுவதும் அதனை நீதியமைச்சும் நாடாளுமன்றமும் பார்த்துக் கொண்டிருப்பதும் ஜனாதிபதி அதனைக் கண்டும் காணாமல் இருப்பதும் இலங்கை நீதித்துறையை சவாலுக்குட்படுத்தும் செயலாகும்.

இவ்வாறான ஒரு நீதித்துறையிடமிருந்து போரால் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கான நீதியை எதிர்பார்க்க முடியாது என்பதற்காகவே போர்க் குற்றங்கள் தொடர்பாகவும் இன அழிப்புத் தொடர்பாகவும் தமிழ் மக்கள் சர்வதேச விசாரணையைக் கோரிநிற்கிறார்கள்.

ஆட்சியில் மதக்கலப்புகள் அகற்றப்பட்டு, இனவாதத் தன்மைகள் களையப்பட்டு ஒரு புதிய அரசியல் கலாசாரம் உருவாக்கப்படவேண்டும் - என்றுள்ளது. (ம)

# வாகனத் தரிப்பிடத்தில் தீ: 40 வாகனங்கள் தீக்கிரை

மட்டக்களப்பு - வாழைச்சேனையில் வாகனத் தரிப்பிட மொன்றில் ஏற்பட்ட தீப் பரவலால் 40க்கு மேற்பட்ட வாகனங்கள் தீக்கிரையாகியுள்ளன. இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

வாகனத் தரிப்பிடத்திலிருந்து புகை மண்டலம் வெளிக்கிளம்புவதை அவதானித்த பிரதேச மக்கள் வாகனங்கள் தீப்பற்றி எரிவதை அவதானித்த நிலையில் பெருமுயற்சியின் பின் தீயைக் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதில் ஒரு முச்சக்கர வண்டி, 34 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 8 துவிச்சக்கரங்கள் என்பன தீக்கிரையாகின. தீப்பரவல் தொடர்பில் வாழைச்சேனைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ச-இ)

# தனியார் மருத்துவமனைக் கழிவுகள் கொழும்பிலேயே எரியூட்டப்படுகின்றன

## சுகாதாரப் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தகவல்

யாழ்ப்பாணம், ஜுலை 20

வடக்கு மாகாணத்திலுள்ள தனியார் மருத்துவமனைகளின் கழிவுகள் கொழும்புக்கு அனுப்பியே எரியூட்டப்படுகின்றன என்று வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

மருத்துவமனைக் கழிவுகள் எரியூட்டல் தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் கழிவுகள் எரிப்பதற்கான எரியூட்டி கோம்பயன்மணல் மயானத்தில் அமைப்பதற்கு யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. கோம்பயன்மணல் மயானத்தில் எங்கு அமைப்பது என்பது ஆராயப்பட்டு வருகின்றது. விரைவில் இடம் அடையாளப்படுத்தப்பட்டதும் பணிகள் ஆரம்பமாகும்.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையிலுள்ள கழிவுகளை எரியூட்டும் இயந்திரத்தின் திருத்தப் பணிகள் முடிவுற்று மீளச் செயற்பட ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, தனியார் மருத்துவமனைகளின் மருத்துவக் கழிவுகள் கொழும்புக்கு அனுப்பியே முழுமையாக எரியூட்டப்படவேண்டும். அவ்வாறுதான் வடக்கில் நடக்கின்றது - என்றார். (ஓ-125)

# குழுக்கள் மோதல்; இருவர் படுகொலை

காலி - கரந்தெனிய பிரதேசத்தில் இரண்டு குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் இருவர் கூரிய ஆயுதங்களால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.சம்பவம் தொடர்பில் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-ரி3-22)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 37ஆவது பட்டமளிப்பு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜுலை 20

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பொதுப்பட்டமளிப்பு நிகழ்வு நேற்றுப் புதன்கிழமை ஆரம்பமாகியது. பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் மூன்று நாள்கள் 8 அமர்வுகளாக நடைபெறவுள்ள இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 278 பேர் பட்டங்களைப் பெறவுள்ளனர்.

சகல பட்டக் கற்கைநெறிகளுக்குமாக 32 தங்கப் பதக்கங்களும், 10 புலமைப்பரிசில்களும், 25 பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

மேலும் ஒவ்வொரு வருடமும் பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் மதிப்புமிக்க பேராசிரியர் அழகையா துரைராசா தங்கப் பதக்கத்தை பீட மட்டத்தில் முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம், கலைப்பீடம்மற்றும் மருத்துவ பீடத்தைச் சேர்ந்த மூவரும், பல்கலைக்கழக மட்டத்தில் விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த ஒருவரும் பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி)

# 'அஸ்வெசும' முறையீடுகள்; தீர்வை விரைந்து காணுக!

## அரச அதிகாரிகளுக்கு சாகல பணிப்பு

கொழும்பு, ஜுலை 20

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்காக இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த சமுர்த்தி அபிவிருத்தித் திட்டத்துக்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட 'அஸ்வெசும' சமூக நலத் திட்டத்துக்கு அரச அதிகாரிகளின் செயலூக்கமான பங்களிப்பு அளிக்க வேண்டும் என ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானி சாகல ரத்நாயக்க கேட்டுக்கொண்டுள்ளார்.

'அஸ்வெசும' சமூக நலத்திட்டத்துக்கு அரச அதிகாரிகளின் பங்களிப்புத் தொடர்பில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது இதுவரை கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள் மற்றும் ஆட்சேபனைகளைத் தீர்த்து தகுதியானவர்களை அடையாளம் காணும் பணியைத் துரிதப்படுத்துமாறு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுத்தார்.

அத்துடன் இந்த வேலைத்திட்டத்தை காலத்துக்கேற்ப நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முன்னெடுப்பதன் முக்கியத்துவத்தையும் சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

குறைந்த வருமானம் பெறும் மக்களின் முன்னேற்றத்துக்காக எடுக்கப்படவேண்டிய கொள்கை ரீதியிலான தீர்மானங்களை உரியமுறையில் எடுக்கத் தவறியதன் விளைவாகவே கடந்த காலங்களில் நாடு பொருளாதாரச் சிக்கலில் மூழ்கியது என்றும் எடுத்துரைத்தார். (ச-இ)

# வாகனங்கள் விபத்து; இருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜுலை 20

கொழும்பு - சீதவாக்கையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற ஓட்டோ - ஹைஏஸ் விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். ஓட்டோ சாரதியான 38 வயதுடைய குடும்பஸ்தரும் அதில் பயணித்த 11 வயது சிறுவனுமே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

சிறுவனுடன் பயணித்த தந்தை படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். ஹைஏஸ் வாகனச் சாரதி கைது செய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி-22)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் போதைப்பாவனையால் நரம்பியல் நோய்கள் அதிகரிப்பு!

## மருத்துவ நிபுணர் அஜந்தா சுட்டிக்காட்டு

**யாழ்ப்பாணம், ஜூலை 20**



**வடக்கில் மதுப்பாவனை மற்றும் போதைப்பொருள் பாவனையால் நரம்பியல் நோயாளர்கள் அதிகரித்துள்ளனர். அத்துடன் இளவயதினரை தற்போது திடீர் மாரடைப்பு, பக்கவாதம் உள்ளிட்ட பிற நோய்களும் தாக்குகின்றன என்று நரம்பியல் மருத்துவ நிபுணர் அஜந்தா கேசவராஜா தெரிவித்தார்.**

யாழ்ப்பாணத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

வடக்கு மாகாணத்தில் நரம்பியல் சார்ந்த நோய்கள் அதிகரித்துள்ளன. போதைப்பொருள் பாவனை மற்றும் மதுபாவனையே நரம்பியல் சார்ந்த நோய்களுக்கு வழிவகுக்கின்றன. குறிப்பாக இளையோர் நரம்பியல் நோய்கள் மற்றும் திடீர் மாரடைப்பு, பக்கவாதம் உள்ளிட்ட நோய்களுக்கு உள்ளாகின்றனர்.

யாழ். போதனா மருத்துவமனைக்கு ஒருநாளைக்கு 6 தொடக்கம் 7 நோயாளர்கள் சிகிச்சைக்காக வருகின்றனர். அதேபோன்று வீதிவிபத்துகளில் மூளை சிதைவுகள் மற்றும் ஏனைய காரணங்களாலும் இளவயதினர் அதிகளவில் பாதிக்கப்படுகின்றனர்.

எனவே வடக்கில் அதிகரித்துள்ள மதுப்பாவனை, போதைப்பாவனையிலிருந்து இளையோரை மீட்டெடுக்க வேண்டும். அதற்கு சமூக ஆர்வலர்கள் முன்வரவேண்டும்- என்றார். (ச-27)



## அரசியல்கைதிகள் இருவர் விடுதலை!

கொழும்பு, ஜூலை 20

நீண்டகாலமாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த தமிழ் அரசியல் கைதிகள் இருவர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மத்திய வங்கி குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு உதவி செய்தார் என்று தெரிவித்து, 200 வருட சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருந்த செல்லையா நவரட்ணம் மற்றும் வெடிபொருள்களுடன் கைது செய்யப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட சண்முகரட்ணம் சண்முகராஜன் ஆகியோரே இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். (ம)

# நீதிமன்ற சான்றுப்பொருளான கஞ்சாவைத் திருடி விற்பனை

## நீதிமன்ற உத்தியோகத்தர் உள்ளிட்ட இரண்டு பேர் பொலிஸாரால் கைது

மன்னார், ஜூலை 20



மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் வைக்கப்பட்டிருந்த, நீதிமன்றச் சான்றுப்பொருளான கஞ்சாவைத் திருடி விற்பனைசெய்ய முயன்ற நீதிமன்ற உத்தியோகத்தர் உட்பட இருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளனர். மன்னார் நகர்பகுதியில் வைத்து மன்னார் விசேட பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முன்னதாக மன்னார் நீதிவான் நீதிமன்றத்தில் சான்றுப் பொருளாகக் காணப்பட்ட கஞ்சாவை திருடி விற்பனை செய்த பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட இருவர் கைது செய்யப்பட்ட நிலையில், மன்னார் மாவட்டத்தில் நீதிமன்றத்தின் கட்டுக்காவலில் உள்ள சான்றுப்பொருள்களான போதைப்பொருள்கள் மீண்டும் திருடப்பட்டமை பல்வேறு அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது. (ம-213)

## பெண்ணொருவர் நடத்திய சூதாட்ட விடுதி முற்றுகை!

கொழும்பு, ஜூலை 20

அங்கொட, தெல்கஹாவத்தையில் பல வருடங்களாக நடத்தப்பட்டு வந்த சூதாட்ட விடுதி முற்றுகையிடப்பட்டு 15 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய மாறுவேடத்தில் சென்று, குறித்த விடுதி முற்றுகையிடப்பட்டது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

குறித்த சூதாட்ட விடுதியை பெண்ணொருவர்-பிரமுகர்களின் உதவியுடன் நடத்தி வந்தாரென விசாரணையில் கண்டறியப்பட்டுள்ளது என்றும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (ச-ரி3-22)

# வெளிநாட்டு நாணயங்கள், 4 பவுண் நகை களவு

யாழ்ப்பாணம், ஜூலை 20



உரும்பிராயிலுள்ள வீடொன்றில் வெளிநாட்டு நாணயங்கள் மற்றும் நகைகள் என்பன களவாடப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை வீட்டிலுள்ளோர் வெளியேறி மதியமே திரும்பியுள்ளனர். இதன்போது வீட்டின் கூரை பிரிக்கப்பட்டிருந்ததை அவதானித்துள்ளனர். வீட்டினுள் சென்று பார்த்த போது 900 யூரோ காசுத்தாள்கள், ஒன்றரை இலட்சம் ரூபா பணம் மற்றும் 4 பவுண் தங்க நகை என்பன திருடப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ச-26)




**'அஸ்வெசும' என்டால் இப்ப எல்லாருக்கும் தெரியும். சமுர்த்திக்குப் பதிலா கொண்டுவரப்போற திட்டத்தின்ர பேர்தான் இது. இந்தத் திட்டத்துக்கு உண்மையாக் கஷ்டப்பட்ட ஆக்களை எடுக்காமல், காசுள்ள ஆக்களைத்தான் கூடுதால எடுத்திருக்கு எண்டு நாடு முழுக்க ஒரே போராட்டம். மீளாய்வுக்கு போடுங்கோ எண்டு அரசாங்கம் சொன்னாலும், அப்பிடிச் செய்யிற மீளாய்வில எத்தினை பேருக்கு நியாயம் கிடைக்குமெண்டு தெரியேலை. இப்பிடி நாடு முழுக்க இந்தத் திட்டத்துக்கு செலக்ட் பண்ணுப்படாத ஆக்கள், நியாயம் கேட்டுப் போராடுறது எண்டால் ஏதோ பிரச்சினை இந்தத் தெரிவு முறையில இருந்திருக்கோனும், உண்மையும் அதுதான்.**

**நாயின்ர வேலையைக் கழுதை பார்த்தால் காரியம் உருப்படாது எண்டுறவை. அதுமாதிரி ஒரு விசயம் நடந்ததால தான் இப்பிடி 'அஸ்வெசும' பயனாளியள் தெரிவில சிக்கல் வந்திருக்கு. முதல்ல இந்தத் திட்டத்துக்கு ஆர் பொருத்தமானவை எண்டு தெரிவு செய்து, அரசாங்கம் கேக்கிற விவரங்களைத் திரட்டி, ஒன்லைன்ல அனுப்பிற வேலை கிராம சேவகர் மாரும், சமுர்த்தி உத்தியோகத்தர்மாரும் தான் செய்யிறதெண்டு இருந்தவை. ஏனெண்டால் அவைக்குத் தான் ஊரில ஆருக்கு கஷ்டம், ஆரிட்ட காசு இருக்கு, ஆரிட்ட கார் இருக்கு எண்ட விவரமெல்லாம் அத்துப்படி. ஆனால் நிலைமை இப்பிடியிருக்க இதைக் குழப்பிற மாதிரி ஒரு சுற்றறிக்கையை அரசாங்கம் விட்டிச்சு. 'இந்தத் திட்டத்துக்கு பொருத்தமில்லாத பயனாளிகளைத் தெரிவு செய்தால் அவையின்ர வேலை பறிபோயிடும்' எண்டதுதான் அந்தச் சுற்றறிக்கை. என்னதான் கண்ணுக்க எண்ணெய்விட்டு விவரம் எடுத்தாலும், எங்கட ஆக்கள் ஒண்டிரண்டு பேர் அதுக்குள்ளையும் சுத்துமாத்துக் காட்டி, பயனாளியள் பட்டியலுக்க வந்திடுவினம். அப்பிடியிருக்க, நூறுவீதம் சரியாச் செய்யாட்டி வேலை போடுமெண்ட பயத்தில, கிராம சேவகர்கள், சமுர்த்தி அலுவலர்கள் இருக்கிற தொழிற்சங்கங்கள் 'நாங்கள் உந்த விளையாட்டுக்கு வரேலை' எண்டு முடிவெடுத்திட்டினம். அதால அரசாங்கத்துக்கு என்ன செய்யிறதெண்டு தெரியேலை.**

**வீம்புக்கு நிண்ட அரசாங்கம் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்மாரையும், புதிசா வேலைக்கு எடுபட்டிருந்த அபிவிருத்தி உத்தியோகத்தரமாரையும் சேர்த்து அனுப்பி இந்த விவரங்களை எடுத்திருக்கு. அவைக்கு ஊரில உள்ளவையின்ர உண்மையான நிலை தெரியாததால, சனம் சொன்ன தகவலை மட்டும் கேட்டு விவரங்களை ஒன்லைன்ல அப்லோட் பண்ணிட்டினம். அதாலதான் இப்ப இவ்வளவு வில்லங்கமும். இதில விவரம் எடுக்கப் போனவையில பிழை சொல்ல ஏலாது. ஏனெண்டால் அவைக்கு சம்பந்தமில்லாத ஊரில போய், இப்பிடியொரு விவரத்தை எடுக்கச் சொன்னால் அவை என்ன செய்வினம்? ஆனாலும் அவை எடுத்த விவரத்துக்கு அலவன்ஸ் காசு குடுபட்டிருக்கு.**

**இப்பிடி பிழையா விவரமெடுத்துச் சீரழியாமல், பேசாமல் கிராம சேவகர்களையும், சமுர்த்தி உத்தியோகத்தர்மாரையும் தேவையில்லாத சுற்றறிக்கையை விட்டுக் குழப்பியிருக்காட்டி, நாடு இப்பிடிக் குழம்பியிருக்காதே.**



- பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பண்பாட்டின் உணர்வுபூர்வம் தமிழ்த் தேசியத்தில் பிரதானம்

## பசுமை இயக்கத் தலைவர் அரசியல் தலைவர்களுக்கு வலியுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 20

**மேடைகளில் தமிழ்த் தேசியம் குறித்து முழங்கும் அரசியல் கட்சிகள் அனைத்தும் தேசியத்தில் பண்பாட்டின் வகிபாகம் குறித்து கருத்திற்கொள்வதில்லை. பண்பாட்டை உள்வாங்காத தேசியம் ஒருபோதும் முழுமை பெறாத உள்ளீடற்ற கொழுக்கட்டை போன்றதே. பண்பாட்டுச் செயற்பாடுகளை அரசியலுடன் சேர்த்து ஒரு பேரியக்கமாக முன்னெடுக்வேண்டும்.**

-இவ்வாறு தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் ஆடிப்பிறப்பு விழா கடந்த திங்கட்கிழமை அராலியில் கொண்டாடப்பட்டது.

அதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையின் சுதந்திரத்துக்குப் பின்னரான தமிழர் அரசியலில் விடுதலைப் புலிகளின் காலத்திலேயே தமிழ் இனத்தின் பண்பாடு குறித்தும் கலை, இலக்கியங்கள் குறித்தும் அதிக கவனம் செலுத்தப்பட்டது. இதற்கெனக் கலை, பண்பாட்டுக் கழகம் என்று தனியான ஒரு அலகே உருவாக்கப்பட்டது. தமிழ்ப் பண்பாடு குறித்த உணர்வுபூர்வமான பிரக்ஞை மக்களிடமும் ஏற்படுத்தப்பட்டது.

ஆனால், முள்ளிவாய்க்கால் போருக்குப் பின்னரான தமிழ்த் தேசிய அரசியலில் கலை, இலக்கியம், பண்பாடு பற்றிய சிந்தனை இல்லாமற்போய்விட்டது. சிங்கள - பௌத்த மேலாதிக்கத்தால் தமிழ்ப் பண்பாடு சிதைக்கப்பட்டுக் கொண்டிருக்கும் அதே வேளை மறுபுறம் தமிழ் மக்களினது உதாசீனத்தாலும் தமிழ்ப் பண்பாடு அரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

மேடைகளில் தமிழ்த் தேசியம் குறித்து முழங்கும் எங்களது அரசியல் கட்சிகள் எதுவும் தேசியத்தில் பண்பாட்டின் வகிபாகம் குறித்து அக்கறை செலுத்துவதில்லை. பண்பாட்டை உள்வாங்காத தேசியம் ஒருபோதும் முழுமை பெறாது.

இனங்களிடமிருந்து வேறு பிரித்துக்காட்டும் தனித்துவமான வாழ்வியல் முறைமையே தேசியமாகும். இதில் முள்ளெலும்பு போன்று பண்பாடு வகிக்கும் பாத்திரம் பிரதானமானது.

இதனை நாம் கலை இலக்கிய . பண்பாட்டுச் செயற்பாடுகளை அரசியலுடன் சேர்த்து ஒரு பேரியக்கமாக முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ச-27)

# நாய்களுக்கான விசர் நாய் தடுப்பூசி

நல்லூர், ஜூலை 20

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட அரியாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுகளில் வளர்ப்பு நாய்களுக்கான இலவச விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு சுகாதார மருத்துவப் பணிமனையால் மேற்கொள்ளப்படவுள்ளது.

ஒரு நாய்க்கான உரிமம் கட்டணமாக ரூபா 50 அறவிடப்படும்.

இந்தத் தகவலை அனைத்து பொதுமக்களும் ஏற்றுக்கொள்வதுடன் தமது நாய்களுக்கான தடுப்பூசியை ஏற்றுக் கொள்ளுமாறும் வேண்டப்படுகின்றனர்.

கீழ்க் குறிப்பிடப்படும் நாள்களில் குறிப்பிட்ட இடங்களில் தடுப்பூசிஏற்றும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

| | |
|---|---|
| 24.07.2023 - திங்கட்கிழமை | |
| மு.ப. 9 - 11 | அரியாலை சனசமூக நிலையம் புங்கன்குளம் வீதி |
| மு.ப. 11 - 1 | பெந்திகோஸ் லேன் |
| பி.ப. 2.30 - 4 | தியாகராசா பதிப்பகம் கண்டி வீதி அரியாலை |
| 25.07.2023 - செவ்வாய்க்கிழமை | |
| மு.ப. 9 - 11 | சரஸ்வதி சனசமூக நிலையம் கண்டி வீதி அரியாலை |
| மு.ப. 11 - 1 | மிருக வைத்திய நிலையம் ஏ.வி. றோட் அரியாலை |
| பி.ப. 2.30 - 4 | பிரப்பங்குளம் அம்மன் கோவிலடி இலந்தைக்குளம் வீதி |
| 26.07.2023 - புதன்கிழமை | |
| மு.ப. 9 - 11 | கலைமகள் சனசமூக நிலையம் அரியாலை |
| மு.ப. 11 - 1 | காந்தி சனசமூக நிலையம் அரியாலை |
| பி.ப. 2.30 - 4 | அருணோதயா சனசமூக நிலையம் அரியாலை |
| 27.07.2023 - வியாழக்கிழமை | |
| மு.ப. 9 - 11 | திருமகள் சனசமூக நிலையம் அரியாலை |
| மு.ப. 11 - 1 | மலர்மகள் சனசமூக நிலையம் அரியாலை |
| பி.ப. 2.30- 4 | பாரதி சனசமூக நிலையம் நாயன்மார்கட்டு செம்மணி வீதி |
| 28.07.2023 - வெள்ளிக்கிழமை | |
| மு.ப. 9 - 11 | அம்பாள் சனசமூக நிலையம் பேச்சி அம்மன் கோவிலடி |
| மு.ப. 11 - 1 | மகேஸ்வரி பாடசாலை அருகில் நாயன்மார்கட்டு |
| பி.ப. 2.30 - 4 | கலைவாணி சனசமூக நிலையம் பொன்னம்பலம் வீதி |
| 31.07.2023 - திங்கட்கிழமை | |
| மு.ப. 9 - 11 | முள்ளி வீதி அரியாலை |
| மு.ப. 11 - 1 | ஆள்காட்டி வீதி அருளம்பலம் வீதிச் சந்தி |
| பி.ப. 2.30 - 4 | இராஜேஸ்வரி வீதி அரியாலை |
| 02.08.2023 - புதன்கிழமை | |
| மு.ப 9 - 11 | கனகரட்னம் வீதி நாவலர் வீதிச்சந்தி அரியாலை |
| மு.ப 11 - 1 | கனகரட்னம் மகா வித்தியாலயம் அருகில் நாவலர் வீதி |
| பி.ப 2.30 - 4 | பாரதி வீதி முதலியார் வீதிச்சந்தி அரியாலை |
| 03.08.2023 - வியாழக்கிழமை | |
| மு.ப 9 - 11 | கச்சேரி நல்லூர் வீதி றக்கா வீதிச்சந்தி அரியாலை |
| மு.ப 11 - 1 | பேரின்பநாயகம் வீதி அரியாலை |
| பி.ப 2.30 - 4 | கச்சேரி நல்லூர் வீதி நாவலர் வீதிச்சந்தி |
| 04.08.2023 - வெள்ளிக்கிழமை | |
| மு.ப 9 - 11 | சாஸ்திரியார் வீதி அரியாலை |
| மு.ப 11 - 1 | அருளம்பலம் வீதி (சந்தனமாதா ஒழுங்கை) |
| பி.ப 2.30 - 4 | கச்சேரி கிழக்கு புகையிரதப் பாதை (ஒழுங்கை) |

# வீதியோரத்தில் பற்றைகள்; போக்குவரத்தில் இடையூறு

## அப்புறப்படுத்தி தருமாறு மக்கள் கோரிக்கை

ஊர்காவற்றுறை, ஜூலை 20

ஊர்காவற்றுறை கண்ணகை அம்மன் இறங்குதுறைக்குப் பயன்படுத்தும் வீதியின் இருமருங்கும் காணப்படும் பற்றைகளை துப்புரவு செய்து தருமாறு அனலைதீவு மற்றும் எழுவைதீவு பயணிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்;

ஊர்காவற்றுறை - சுருவில் வீதியிலிருந்து கண்ணகை அம்மன் இறங்குதுறைக்குச் செல்லும் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரமான வீதியின் இருபக்கமும் முட்பற்றைகள் வளர்ந்து அடர்ந்துள்ளன.

இதனால் பேருந்துகள் உட்பட அனைத்து வாகனங்களிலும் செல்லும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வீதியைச் சூழவுள்ள பற்றைகளால் தினமும் விபத்துகள் இடம்பெற்றுவருவதுடன் பலரும் காயமடைகின்றனர்.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு ஊர்காவற்றுறை பிரதேசசபையினர் வீதியோரங்களில் காணப்படும் பற்றைகளை வெட்டி அப்புறப் படுத்தி தரவேண்டும் - என்றனர். (ச-ரி2-9)

# மாணிக்க விழா

யாழ்ப்பாணம், ஜூலை 20

ஏழாலை மேற்கு, ஸ்ரீவிநாயகர் ஐக்கிய நாணய சங்கத்தின் 40 ஆவது ஆண்டு மாணிக்க விழா நாளை 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் 23 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை ஏழாலை முத்தமிழ் மன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்குறித்த நிகழ்வில் விருந்தினர்கள் உரை, இலங்கை - இந்திய நடன இசைக் கலைஞர்கள் பங்கேற்கும் பாரம்பரிய கலைநிகழ்வுகள், வாழ்வாதார உதவி வழங்கல், அங்கத்தவர் கௌரவிப்பு மற்றும் பரிசில் வழங்கல் ஆகியன இடம்பெறவுள்ளன. (ய)

# சாவகச்சேரி மருத்துவமனை சிறுவர் முற்றம் புனரமைப்பு

சாவகச்சேரி, ஜூலை 20

போர்க் காலத்தில் சிதைவுற்றிருந்த சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் சிறுவர் முற்றத்தின் புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

2002 ஆம் ஆண்டு மீளக் குடியமர்வின் போது ஒப்பந்த அடிப்படையில் பொறுப்பேற்ற மருத்துவர் ச. அம்பிகைபாகனால் தற்காலிகமாக விடுதிகள் அமைக்கப்பட்டு சேவைகள் மேற்கொள்ளப்பட்டன.

2005ஆம் ஆண்டு ஜப்பான் நிறுவனமொன்றில் அனுசரணையுடன் இருமாடியில் குழந்தைகள் விடுதியுடன் சிறுவர் முற்றம் அமைக்கப்பட்டது.

அந்தக் கட்டடத்தின் புனரமைப்புப் பணிகளே தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி3-9)

# பஸ் பயணியிடம் கஞ்சாப் பொதி மீட்பு

கிளிநொச்சி, ஜூலை 20

பேருந்தில் கேரளக் கஞ்சாப் பொதியை மறைத்து எடுத்துச் சென்ற ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து அக்கரைப்பற்று நோக்கி நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பயணித்த இ.போ.ச. பேருந்தில் பயணித்தவரிடமிருந்து இந்தக் கஞ்சாப் பொதி மீட்கப்பட்டது.

ஆனையிறவு காவலரண் தடுப்பில் குறித்த பேருந்தை சோதனையிட்டபோது இந்தக் கைது இடம்பெற்றது.

சந்தேகநபரிடமிருந்து 4 கிலோ 160 கிராம் கஞ்சா கைப்பற்றப்பட்டது. சந்தேகநபர் வள்ளிபுனம் - புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-113-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## ரணில் விக்கிரமசிங்கவா? ரணில் ராஜபக்சவா?

கணக்குப்பிள்ளை பேசக்கூடாது கணக்குப்புத்தகம்தான் பேசவேண்டும் என்று தமிழில் ஒரு சொல்லாடல் உள்ளது. சொல்லைவிட செயலே அந்தச் சொல்லை எடுத்தியம்பவேண்டும். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில், 'நான் ரணில் ராஜபக்ச அல்ல' என்று கூறியிருந்தார். அவர் ரணில் ராஜபக்சவா? இல்லையா? என்பதை அவர் சொல்லக்கூடாது, அவரது செயல்தான் நிரூபிக்கவேண்டும்.

தமிழ்க் கட்சிகளுடன் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பில் பொலிஸ் அதிகாரம் அற்ற 13ஆவது திருத்தத்தைப்பற்றி ரணில் பிரஸ்தாபித்தபோது, கடந்த காலங்களில் ஜனாதிபதியாக இருந்த மஹிந்த ராஜபக்ச 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி 'அதற்கு அப்பாலும் அதிகாரப் பகிர்வை முன்னெடுப்பேன் என்று கூறியிருந்தார் என்றும் இப்போதுள்ள கலப்பு அரசாங்கத்தில் (ரணில் ராஜபக்ச) இருந்துகொண்டு 13 'மைனஸ்' பற்றிக் கதைப்பதை ஏற்கமுடியாது என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தபோதே, 'நான் ஒன்றும் மஹிந்த ராஜபக்சவின் தொடர்ச்சியல்ல. நான் ரணில் விக்கிரமசிங்க, ரணில் ராஜபக்ச அல்ல' என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதிலளித்திருந்தார். ஜனாதிபதி கதிரைக்கு பலமுறை பல வியூகங்களில் முயன்று தோற்றுப் போன ரணில் விக்கிரமசிங்கவுக்கு, அரகலயவின் விளைவால் உண்டான இடைவெளியில், குறுக்கு அதிர்ஷ்டத்தில் கிடைத்ததே இந்த ஜனாதிபதிப் பதவி. இந்தப் பதவியை அடைவதற்குக் காரணமாக விருந்த அரகலயவையே இல்லாது அழித்து ஒழித்தவர் ரணில். ரணில் விக்கிரமசிங்கவாக இருக்கும் வரையில் தேவைப்பட்ட அரகலய, ராஜபக்சக்களின் ஆதரவுடன் ஜனாதிபதிக் கதிரையில் ரணில் ராஜபக்சவாக அமர்ந்ததும் அரகலயவைத் தூக்கியெறிந்தார்.

2004 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பிரதமராக இருந்து பேச்சு நடத்தியவர் ரணில். அப்போதைய சூழலில் உள்ளக சுயநிர்ணயத்துடன் கூடிய சமஷ்டித் தீர்வு வரைக்கும் இணங்கியிருந்தார். பின்னர் 2015 ஆம் ஆண்டு நல்லாட்சிக் காலத்தில் பிரதமராக இருந்து புதிய அரசமைப்பு உருவாக்கத்தை ரணில் முன்னெடுத்திருந்தார். புதிய அரசமைப்பில் 13 ஆவது திருத்தத்தையும் தாண்டிய அதிகாரப்பகிர்வுக்கு ரணில் இணங்கியிருந்தார். அந்த முயற்சிகளில் முழுமையாக ஒத்துழைத்திருந்தார். மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்கள் வழங்கப்படுவதற்குக்கூட இணக்கம் கரணப்பட்டிருந்தது. தமிழ் மக்களுக்கான இனப்பிரச்சினைத் தீர்வுக்காக தென்னிலங்கை ஆட்சியாளர்களில் ஓரளவு முற்போக்கானவராக ரணில் தன்னை இனங்காட்டியிருந்தார். ஆனால், இதே ரணில் விக்கிரமசிங்க இப்போது ராஜபக்சக்களின் தயவில் ஜனாதிபதியாக, ரணில் ராஜபக்சவாக இருந்துகொண்டு உள்ளக சுயநிர்ணயத்துடன் கூடிய சமஷ்டி அதிகாரப் பகிர்வுக்கு 2005 ஆம் ஆண்டு இணங்கியமை தவறு என்றும் 13 ஆவது திருத்தத்தின் ஊடாக பொலிஸ் அதிகாரம் வழங்கமுடியாது என்றும் கூறுகின்றார். 'ரணில் விக்கிரமசிங்கவாக' இருக்கும் வரையில் ஒருமுகமாகவும் 'ரணில் ராஜபக்சவாக' இருக்கும்போது வேறுமுகமாகவும் அவர் தோற்றமளிக்கின்றார்.

இப்போது ஆட்சியிலிருப்பது ரணில் விக்கிரமசிங்கவா? ரணில் ராஜபக்சவா? என்பது நாட்டு மக்களுக்குத் தெரியும். தான் ரணில் ராஜபக்ச அல்ல என்று வாயால் சொல்லக்கூடாது. அதைச் செயலில் நிரூபிக்கவேண்டும். அதைவிடுத்து ரணில் ராஜபக்சக்களைப்போன்று நடந்து கொண்டு நான் ரணில் ராஜபக்ச இல்லை என்று ஒப்பாரிவைப்பதால் எதுவும் நடக்காது.

### நாளொரு நல்வார்த்தை

"தத்துவங்கள் எல்லாம்
இரண்டே சொற்களில் அடங்கிவிடும்.
ஒன்று பொறுத்துக்கொள்ளல்,
மற்றொன்று விட்டு விலகல்"
— எபிடேக்ஸ்



### தமிழ்க் கட்சிகளின் கடிதம்

# இந்திய அழுத்தங்களுக்கு இராஜதந்திர நடவடிக்கை!



**கொழும்பு, ஜூலை 20**

**தமிழ்க் கட்சிகளின் கடிதம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு, இந்திய அரசாங்கம் அழுத்தம் கொடுத்தால், அதற்கு இராஜதந்திர ரீதியான பதிலை ஜனாதிபதி வழங்குவார் என்று அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்தார்.**

அமைச்சரவையின்வாராந்த முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பு அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நண்பகல் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் பந்துல இவ்வாறு தெரிவித்தார்.

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இந்தியப் பிரதமர் மோடியை நாளை சந்தித்துப் பேச்சு நடத்தவுள்ளார். இந்தப் பேச்சின்போது மோடி, ரணிலிடம் வலியுறுத்தவேண்டிய விடயங்கள் தொடர்பில், தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து மோடிக்குக் கடிதம் அனுப்பியுள்ளன. இந்தக் கடிதம் இரு நாட்டுத் தலைவர்களின் சந்திப்பில் விவாதப் பொருளாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படும் நிலையிலேயே, 'இந்த விவகாரம் இராஜதந்திர ரீதியில் கையாளப்படும்' என்று தெரிவித்துள்ளார் பந்துல. (ம-இ)

## அமைச்சுகளை ஏற்றோரை நீக்குவதற்குத் தீர்மானம்!

ஐக்கிய மக்கள் சக்தி முடிவு

கொழும்பு, ஜூலை 20

அமைச்சர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார ஆகியோரை ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து இருந்து நீக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுவில் இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கட்சியின் பொதுச் செயலர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் சக்தியின் முடிவுகளுக்கு மாறாக அமைச்சுப் பதவிகளை ஏற்றுக்கொண்ட இவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க கடந்த சில மாதங்களாக ஐக்கிய மக்கள் சக்தி தயாராகி வந்தது. இந்த நிலையிலேயே தற்போது அவர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து நீக்கப்படவுள்ளனர். (ம-இ)

### யாழ்ப்பாண விமான நிலையம்

## விமானங்களுக்கு 50 வீத வரிவிலக்கு

கொழும்பு, ஜூலை 20

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக, இந்த விமான நிலையத்தில் சர்வதேச விமானங்களால் செலுத்தப்பட வேண்டிய பயன்பாட்டு வரிகளில் (விமானத் தரிப்பு, மற்றும் ஓடுபாதை வரிகள்) 50 வீதமானவற்றை தள்ளுபடி செய்வதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் மாதமே இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், இந்தச் சலுகை இந்த மாதம் 11ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ளது. இந்த நிலையிலேயே மேலும் ஆறு மாதங்களுக்கு இந்த வரி விலக்கு தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. (ம-இ)

நாளை

21.07.2023
வெள்ளிக்கிழமை
ஆடி 05

சுபநேரம் : 06.01 - 07.31
ராகுகாலம் : 10.31 - 12.01

சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். கோட்டைப் பகுதியில் மீளவும் சமூகப் பிறழ்வுகள்!

## கட்டுப்படுத்துமாறு பொதுமக்கள் கோரிக்கை

**யாழ்ப்பாணம், ஜூலை 20**
**யாழ்ப்பாணம் கோட்டைப் பகுதிகளில் மீளவும் அதிகளவான சமூகச் சீரழிவுச் செயற்பாடுகள் மற்றும் போதைப்பொருள் வர்த்தகம் என்பன தலைதூக்கியுள்ளன. இதனைக் கட்டுப்படுத்த யாழ்.மாவட்டச் செயலர் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.**

அவர்கள் மேலும் தெரிவிக்கையில்; வீரசிங்கம் மண்டபமருகேயுள்ள பகுதி, முனியப்பர் கோயிலடி உள்ளிட்ட இடங்களில் சமூகச் சீரழிவுகள் அதிகரித்துள்ளன.
இரவுவேளைகளில் கூட்டம் கூட்டமாகக் கூடும் இளைஞர்கள் போதைப் பொருள் பாவனையிலும் வியாபாரத்திலும் ஈடுபடுவதை அவதானிக்க முடிகிறது.
இதனைக் கட்டுப்படுத்த வேண்டிய பொலிஸார் அசண்டையீனமாகச் செயற்படுகின்றனர்.
இந்தப் பகுதிகள் இரவுவேளைகளில் ஒளியின்றி இருள்சூழ்ந்து காணப்படுகின்றன. அதனைச் சாதகமாகப் பயன்படுத்தி சமூக கலாசாரச் சீரழிவுகள் தலைதூக்கியுள்ளன.
எமது கண்களுக்கு முன்பாக சமூகச் சீரழிவு இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது.
எனவே இருளில் மூழ்கியுள்ள இந்தப் பகுதிக்கு மின்சார இணைப்புகளை ஏற்படுத்தி - சமூகப் பிறழ்வுகளில் ஈடுபடுவோரைக் கண்டறிந்து உடன் சட்டத்தின் முன் நிறுத்தி தகுந்த தண்டனைக்குட்படுத்த யாழ். மாவட்டச் செயலர், பொலிஸார் இணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றனர். (ச-17)

# வவுனியாவில் ஆடிப்பிறப்பு

வவுனியா, ஜூலை 20
வவுனியாவில் தமிழர் கலாசாரப் பண்பாட்டுடன் ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் நேற்றுமுந்தினம் திங்கட்கிழமை சிறப்பாக இடம்பெற்றன.
வவுனியா நகரசபை மற்றும் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நினைவுத்தூபியில் முச்சக்கரவண்டி உரிமையாளர் சங்கத்தலைவர் இ.ரவீந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் நினைவுத் தூபிக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுப் பேருரையும் நிகழ்த்தப்பட்டது.
இந்த நிகழ்வில் நகரசபைச் செயலாளர் செந்தில்நாதன், வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் ஜி. ரி.லிங்கநாதன், நகரசபை முன்னாள் தலைவர் இ.கௌதமன், நகரசபை முன்னாள் உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பாடசாலை மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஏ-ரி,18)



# மரக்கன்றுகளுக்கு தீ வைத்த விஷமிகள்

கிளிநொச்சி, ஜூலை 20
ஏ-9 நெடுஞ்சாலையின் ஆனையிறவுப் பகுதியில் நடப்பட்டிருந்த மரக்கன்றுகளுக்கு இனந்தெரியாத விஷமிகளால் கடந்த திங்கட்கிழமை தீ வைக்கப்பட்டுள்ளது.
தன்னார்வ அமைப்பொன்றால் வீதியின் இரு மருங்கிலும் நடப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்த 28 மரக்கன்றுகள் தீயில் எரிந்து கருகியுள்ளன.
சுற்றுச்சூழலுக்கு நன்மை பயக்கும் வகையில் மரக்கன்றுகள் நடப்படும் வேளையில் இனந்தெரியாத விஷமிகளால் மேற்கொள்ளப்பட்ட இந்த அநாகரிகச் செயற்பாட்டுக்கு மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (ச-27)

# உடைமையில் ஹெரோய்ன்; வவுனியாவில் இருவர் கைது

வவுனியா, ஜூலை 20
வவுனியாவில் வெவ்வேறு இடங்களில் மேற்கொள்ளப்பட்ட திடீர்ச் சோதனை நடவடிக்கையில் உயிர்கொல்லி ஹெரோய்ன் போதைப்பொருளுடன் இளைஞர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.
வவுனியா குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் கடந்த திங்கட்கிழமை இந்தக் கைது இடம்பெற்றது.
கூமாங்குளம் பகுதியில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் 140 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் மீட்கப்பட்டது.
வேம்பங்குளம் பகுதியில் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரிடமிருந்து 5 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டது என பொலிஸார் தெரிவித்தனர். (ச-18)



மன்னார் மாவட்டச் செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஆடிப்பிறப்பு நிகழ்வில் மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தனுக்கு 'கலைச்சேவகன்' விருது மன்னார் மாவட்டச் செயலாளர் திருமதி. அ.ஸ்ரான்லி டிமெலால் வழங்கப்பட்டது. (ஏ-ரி,213)

# யாழ்ப்பாணம் மலருக்கு ஆக்கங்கள் அனுப்பலாம்

யாழ். மாவட்டப் பண்பாட்டுப் பேரவையால் நடத்தப்படும் 2023 ஆம் ஆண்டுக்கான மாவட்டப் பண்பாட்டு விழாவில் வெளியீடு செய்யப்படவுள்ள 'யாழ்ப்பாணம்' மலர் - 2 க்கான ஆக்கங்கள் கோரப்பட்டுள்ளன. 'யாழ்ப்பாணத்து மொழிவழக்கும் தமிழிலக்கியமும்' எனும் தொனிப்பொருளை உள்ளடக்கியதாக ஆக்கங்கள் அனுப்பப்படவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஆக்கங்கள் ஐந்து பக்கங்களுக்கு மேற்படாதவாறு ஏ4 தாளில் கணினியில் தட்டச்சு செய்து ( Font-Baamini, FontSize-12 ), gajaffna@sitnet.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மென்பிரதியையும் அதன் வன்பிரதியை நேரடியாக அல்லது பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் ஊடாக எதிர்வரும் ஓகஸ்ட் 31 ஆம் திகதி திங்கட்கிழமைக்கு முன்னர் 'தலைவர். யாழ்ப்பாண மாவட்டப் பண்பாட்டுப் பேரவை, மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்' எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கமுடியும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஏ-ரி2, 27)



# பொதுநூலகம் சென்ற கனேடியத் தூதுவர் எரிக்

கொழும்பு, ஜூலை 20
இலங்கைக்கான கனேடியத் தூதுவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்துக்குச் சென்றார்.
யாழ். மாநகர ஆணையாளர் இ.த.ஜெயசீலன் இலங்கைக்கான கனேடியத் தூதுவர் எரிக் வோல்ஸை வரவேற்றுக் கலந்துரையாடினார்.
இந்தச் சந்திப்பில் யாழ். பொதுசன நூலக நூலகர் உள்ளிட்ட சில உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (ஏ-125)

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சில் ஆடிப்பிறப்பு விழா முன்னெடுப்பு

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் பற்றிக் டிரஞ்சனின் ஏற்பாட்டில் வடக்கு மாகாணக் கல்வி பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் ஆடிப்பிறப்பு விழா கடந்த திங்கட்கிழமை சிறப்பாக முன்னெடுக்கப்பட்டது.
இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துலசேன மற்றும் சிறப்பு விருந்தினராக தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர்



ஆறு. திருமுருகன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினர்.
இந்த நிகழ்வில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை மாணவர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இந்த விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன, பரிசில்களும் வழங்கப்பட்டன, நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு ஆடிக் கூழ் மற்றும் கொழுக்கட்டை என்பன வழங்கி வைக்கப்பட்டன. (ஏ-ரி,27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கசிப்புடன் பலமுறை கைது 50,000 ரூபா தண்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

ஆனைக்கோட்டையில் கசிப்புடன் கைதுசெய்யப்பட்டவருக்கு 50ஆயிரம் ரூபா தண்டம் விதித்து கடந்த திங்கட்கிழமை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. கடந்த வாரம் கசிப்புடன் ஆனைக்கோட்டையில் 32 வயதான சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபருக்கு எதிராக வழக்குப் பதிவு செய்து கடந்த திங்கட்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டபோது, சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

அதற்கமைய அவர் மீது ஏற்கனவே கசிப்பு தொடர்பான வழக்குகள் நிலுவையில் உள்ள நிலையில் 50 ஆயிரம் ரூபா தண்டம் விதித்து நீதிமன்று உத்தரவிட்டது. (ச-ரி2,125)

## உடைமையில் கசிப்பு தண்டம் ரூ 10,000

யாழ்ப்பாணம், ஜூலை 20

கசிப்பை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டவருக்கு 10 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆனைக்கோட்டை மூன்றாம் கட்டைப் பகுதியில் கசிப்பை உடைமையில் வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகநபர் கடந்த திங்கட்கிழமை கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். சந்தேகநபர் குற்றத்தை ஒப்புக்கொண்ட நிலையில் 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதித்து கடுமையான எச்சரிப்புடன் விடுவிக்கப்பட்டார். (ச-ரி2,125)

## உயிர்கொல்லியுடன் இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், ஜூலை 20

ஆனைக்கோட்டை பகுதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இளைஞன் ஒருவன் உயிர்கொல்லி போதைப்பொருளான ஹெரோய்னுடன் கைதுசெய்யப்பட்டான். உடைமையில் வைத்திருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த புலனாய்வுத் தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றது.

40 மில்லிகிராம் ஹெரோய்னுடன் 24 வயதான இளைஞரே கைதுசெய்யப்பட்டார்.

சந்தேகநபரை மேலதிக விசாரணையின் பின் மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச-ரி2-125)

## கோடாவுடன் கைதான பெண்ணுக்குப் பிணை

யாழ்ப்பாணம், ஜூலை 20

ஆனைக்கோட்டைப் பகுதியில் கோடாவுடன் கைதுசெய்யப்பட்ட பெண்ணை பிணையில் செல்ல அனுமதித்து வழக்கு தவணையிடப்பட்டுள்ளது என்று மானிப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

புலனாய்வுத் தகவலுக்கமைய சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் 28 லீற்றர் கோடாவை பெண்ணொருவரிடமிருந்து மீட்டனர். சந்தேகநபர் கடந்த திங்கட்கிழமை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டார். நீதிமன்று சந்தேகநபரை பிணையில் செல்ல அனுமதித்து வழக்கைத் தவணையிட்டுள்ளது. (ச-ரி2, 125)

### மோடிக்கான கடிதங்கள் விவகாரம்;

# தமிழரசு தனது கடிதத்தில் சமஷ்டியைக் கோரவில்லை

### கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 20

**இலங்கைத் தமிழரசுக்கட்சி இந்தியப்பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில், சமஷ்டி தொடர்பில் எதையும் வலியுறுத்தவில்லை. மாறாக தமிழ் மக்களுக்குத் துரோகமே இழைத்துள்ளது - என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அரசமைப்புக்கான 13 ஆவது திருத்தம் உள்ளடங்கலாக ஒற்றையாட்சி முறையின் கீழான எந்தவொரு தீர்வையும் நிராகரிக்கும் அதேவேளை, தமிழ் மக்கள் சுயநிர்ணய உரிமையுடனும் கௌரவத்துடனும் வாழ்வதற்கு வழிவகுக்கக்கூடிய சமஷ்டி முறையிலான தீர்வை இந்தியா வலியுறுத்த வேண்டுமெனக்கோரி நாம் இந்தியாவுக்குக் கடிதம் எழுதியுள்ளோம்.

அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்து பிளவுபட்டு இயங்கும் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக்கட்சிகளும், க.வி.விக்னேஸ்வரனும் இணைந்து இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா அழுத்தம் வழங்க வேண்டுமென வலியுறுத்தியுள்ளனர். இருப்பினும் அதில் 13ஆவது திருத்தம் மாத்திரமே வலியுறுத்தப்பட்டிருப்பதுடன், சமஷ்டி குறித்து எதுவும் கூறப்படாததன் காரணமாக அந்தக்கடிதத்தில் கையெழுத்திடவில்லை என்று விளக்கமளித்த இலங்கைத் தமிழரசுக்கட்சி, இந்தியப் பிரதமர் மோடிக்குத் தனியாகக் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

அந்தக்கடிதத்தில் ஏற்கனவே கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் 29 ஆம் திகதி ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து இந்தியாவுக்கு அனுப்பிவைத்த கடிதத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த கடந்தகால வரலாறுகள் சேர்க்கப்பட்டுள்ளன. அவற்றுக்கு மேலதிகமாக இந்த முறை என்ன விடயம் வலியுறுத்தப்பட்டிருக்கின்றது என்று பார்த்தால், 'இலங்கை அரசால் இந்தியாவுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகளைத் தாமதமின்றி நடைமுறைப்படுத்துமாறு இந்தியா அழுத்தம் பிரயோகிக்கவேண்டும்' என்று மாத்திரமே குறிப்பிடப்பட்டுள்ளது. மாறாக சமஷ்டி முறையிலான தீர்வு வலியுறுத்தப்படவில்லை.

ஆக, இதுவரையான காலமும் இலங்கை தமக்கு வழங்கிய வாக்குறுதியாக இந்தியா எதனைக் கருதுகின்றது என்று பார்க்கவேண்டியுள்ளது. அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துதல் மற்றும் அதற்கு அமைவாக மாகாணசபைத்தேர்தல்களை விரைவாக நடத்துதல் ஆகியவற்றையே இலங்கை வழங்கிய வாக்குறுதிகளாக இந்தியா கருதுகின்றது என்பதைக் கடந்த காலங்களில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இந்திய வதிவிடப்பிரதிநிதி ஆற்றிய உரை, இலங்கை பயணத்தின் போது இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் ஆற்றிய உரை போன்றவற்றின் மூலம் அறிந்து கொள்ளமுடிகின்றது. எனவே அதனையே மீண்டும் வலியுறுத்தியிருப்பதன் ஊடாக தமிழரசுக் கட்சி தமிழ் மக்களுக்கு மீண்டும் அதே துரோகத்தைச் செய்திருக்கின்றது - என்றார். (ம)

## சீமைக்கருவேலமர அழிப்புக்கு தரவுகள் திரட்டல்

### ஊர்காவற்றுறை பிரதேச செயலகம் ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 20

பனைமர விருத்திக்கு பாதிப்பாக அமையும் சீமைக்கருவேலமரங்களை அழிப்பதற்கு அவற்றின் அடர்த்தி மற்றும் பரப்பளவு என்பன குறித்த தரவுகள் சேகரிக்கப் படுகின்றன என ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

சீமைக்கருவேலமரங்கள் பனைமரங்களுக்குப் பாதிப்பாக அமைகின்றன. அவற்றை அழித்து பனை வளத்தை பெருக்குவதற்கு ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

தற்போது சீமைக்கருவேலமரங்கள் குறித்த தரவுகள் திரட்டப்படுகின்றன.

பனைமரங்கள் தனியார் காணிகளிலும் பெரும்பாலான காணி உரிமையாளர்கள் வெளிநாடுகளில் வசிப்பதால் குறித்த நடவடிக்கைளை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன.

வெகுவிரைவில் இதற்கான அனைத்துப் பணிகளும் ஆரம்பிக்கப்படும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச-125)

## சகோதரியின் நகை 'அபேஸ்' செய்த இளைஞர்

யாழ்ப்பாணம், ஜூலை 20

சகோதரின் நகையைத் திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார் என யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர். யாழ். நகரை அண்மித்த பகுதியில் இந்தத் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

தான் வீட்டில் இல்லாத நேரம் தனது நகைகள் களவாடப்பட்டுள்ளன என யாழ். பொலிஸ் நிலையத்தில் பெண்ணொருவரால் நேற்றுப் புதன்கிழமை முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டுக்கமைய மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் அவருடைய சகோதரர் கைது செய்யப்பட்டுள்ளார். திருடப்பட்ட நகை இளைஞரால் அடகு வைக்கப்பட்டு விட்டதாகவும், அடகு வைத்துப் பெறப்பட்ட பணத்தில் 50 ஆயிரம் ரூபா மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ச-26)

## குமுதினி படகு விரைவில் மீண்டும் சேவையில்

### சமநிலைச் சோதனை முன்னெடுப்பு

மீள்புனரமைப்பு செய்யப்பட்ட குமுதினி படகின் சமநிலை பரிசோதனை வல்வெட்டித்துறை - ரேவடி கடற்கரையில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்பட்டது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மாகாணப் பணிப்பாளர் ஜொய்ஸ் குறூஸ் முன்னிலையில் கப்பல் கட்டடக்கலை ஆலோசகர் ஆலந்தி விமலஜியாஸ் இந்த சோதனை இடம்பெற்றது. இதன்போது சுமார் 4 ஆயிரம் கிலோ சுமை மற்றும் 85 பயணிகள் ஏற்றப்பட்டு சுமார் 2 மணிநேரம் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

பரிசோதனை முடிவுகள் கிடைக்கப்பெற்றதன் பிற்பாடு அடுத்துவரும் சில நாள்களில் குமுதினிப் படகு சேவையில் ஈடுபடும் என தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்குச் சொந்தமான குமுதினிப் படகை வல்வெட்டித்துறை - நெடியகாட்டைச் சேர்ந்த சரவணபவன் புனரமைப்புச் செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-ரி2-27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Allianz

## ANNUAL AWARDS 2023

பிரமாண்டத்தை வெளிப்படுத்தும் ஒரு மாலை நேரத்தில், அலியான்ஸ் லங்கா மிகவும் எதிர்பார்க்கப்பட்ட வருடாந்த தனது விருது விழாவை 2023 ஜூன் 27 அன்று கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் பெருமையுடன் நடத்தியது. 700 க்கும் மேற்பட்ட மதிப்பிற்குரிய விருந்தினர்கள் மற்றும் விருது வென்றவர்கள் கலந்து கொண்டதால், உற்சாகத்துடன் கூடிய விறுவிறுப்பான சூழல் விழாவை மேலும் அலங்கரித்தது.

மாலையின் முக்கியத்துவத்தைச் சிறப்பிக்கும் வகையில், அலியான்ஸ் குழுமத்தின் உலகளாவிய மற்றும் பிராந்திய பிரமுகர்கள், ரெனாடே வாக்னர் - Allianz SE இல் நிர்வாகக் குழுவின் உறுப்பினர், அனுஷா தவராஜா - Allianz AsiaPacific இல் பிராந்திய CEO, மற்றும் மெலனி கிழிக் - Allianz AsiaPacific இல் பிராந்திய CHRO நிகழ்வை சிறப்பித்தனர். அலன் ஸ்மீ அலியான்ஸ் இன்சூரன்ஸ் லங்கா லிமிடெட் இன் பிரதம நிறைவேற்று அதிகாரி மற்றும் நாட்டின் மேலாளர், ஜெயலால் ஹேவாவசம் - அலியான்ஸ் லைப் இன்சூரன்ஸ் லங்கா லிமிடெட் இல் CEO தலைமை அதிகாரிகளுடன், சிரேஷ்ட நிர்வாகம் மற்றும் விற்பனை மேலாண்மை குழுக்களுடன், மேலும் ஒரு பகுதியாக மாலை நேரத்தை சிறப்பித்தனர்.

இந்த நேர்த்தியான மற்றும் பொழுதுபோக்கு நிறைந்த இரவு, எங்கள் விற்பனைப் படையின் அர்ப்பணிப்பு மற்றும் சிறந்த செயல்திறனைக் கொண்டாடியது. அலியான்ஸ் லங்கா தமது வெற்றியாளர்களுக்கு அவர்களின் தொடர்ச்சியான வெற்றிக்கு தனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவிக்க விரும்புகிறது.



அனுஷா தவராஜா
பிராந்திய தலைமை நிர்வாக அதிகாரி
அலியான்ஸ் AsiaPacific



அலியான…



நிஹால் ஷெரிடன் பெர்னாண்டோ
சாம்பியன்ஸ் சாம்பியன் & MDRT TOT தகுதி
ஆயுள் காப்பீடு



G U I கின்ஹொட
CEO வின் விருது
பொது காப்பீடு





## எங்கள் சிறப்புமிக…



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**தேவை**
சாரதி, கூலியாட்கள், பொதி செய்யக்கூடியவர்கள், மில் உபகரணங்கள், தேங்காய், தானியங்கள்.
077 772 2215

# துணுக்காய் கல்வி வலயத்தில் அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

துணுக்காய் கல்வி வலயத்தில் நிலவும் அதிபர் வெற்றிடங்களுக்கு தரம் III ஐச் சேர்ந்த அதிபர்களிடமிருந்து விண்ணப்பங் கள் கோரப்பட்டுள் ளன.

முல்லைத்தீவு சண்முகரத்தினம் வித்தியாலயம், முல்லைத்தீவு பொன்னகர் தமிழ் வித்தியாலயம், முல்லைத்தீவு ஈஸ்வரன் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே அதிபர் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் யாவும், மாகாணக்கல்வி அமைச்சின் செயலாளரால் வெளியிடப்பட்ட 'அதிபர் வெற்றிடம் நிரப்புதல்' சுற்றறிக்கை இலக்கம் 2022/01 க்கு அமைய பூர்த்தி செய்யப்பட்டு, ஜூலை 24 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளார் அறிவித்துள்ளார். (ச-ரி3)

## மரண அறிவித்தல்

தோற்றம் 12 . 08 . 1942



மறைவு 17 . 07 . 2023

### திருமதி ஆறுமுகராஜா சரஸ்வதி

மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகராஜா சரஸ்வதி கடந்த (17.07.2023) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - இராசம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - பொன்னம்மா தம்பதிகளின் மருமகளும், காலஞ்சென்ற ஆறுமுகராஜாவின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற யோகராசா மற்றும் தவலஷ்சுமி ஆகியோரின் அருமைத் தாயாரும், உதயராணி, சிறீதரன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற ஜோதீஸ் மற்றும் உமாந்தினி, அரவிந்தி, கிருஷ்ணா, வைஷ்ணவன், விஷ்ணுகா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் இராசதுரை பவளம், பூவதி, தங்கமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான கனகம்மா, சின்னத்தம்பி, கந்தையா மற்றும் மகேஸ்வரி, சிறிகைலாசநாதன், சிவபாலநாதன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2023) வியாழக்கிழமை பிற்பகல் ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காக்கைதீவு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
ஆனைக்கோட்டை. (CS 25566) AH-1 குடும்பத்தினர்.

077 533 3430

## 11ஆம் ஆண்டு நினைவுதினம்

தோற்றம் 04 . 06 . 1944



மறைவு 21 . 07 . 2012

### திரு.நாகலிங்கம் தியாகராசா

திதி : திருதியை

பதினொரு ஆண்டுகள் கடந்தும் உங்கள் நினைவுகள்
ஆறவில்லை. கண்கள் இரண்டும் உங்கள்
வதனம் தேடிச்செல்லும் இடமெல்லாம்
தேடித் தொலைந்தன ஆண்டுகள் பதினொன்று

தி.வைகுந்தவாசன் (மகன் )

(CS 25568) A-1

# இலங்கையில் முதலிடுகிறது

## இந்தியாவின் எச்.சி.எல். நிறுவனம்

கொழும்பு, ஜூலை 20

இந்தியாவின் முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனமான எச்.சி.எல். நிறுவனம் இலங்கையில் முதலீடு செய்ய முன்வந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வழிகாட்டலின் கீழ் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது என்று கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தியாவுக்கு அண்மையில் பயணம் செய்திருந்த கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் புதுடில்லியில் எச்.சி.எல். நிறுவன அதிகாரிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

விரைவில் எச்.சி.எல். நிறுவனம், இலங்கை முதலீட்டுச்சபையுடன் இதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தினூடாக தகவல் தொழில்நுட்பத்துறையில் இளையோருக்கு வேலைவாய்ப்பு களைப் பெற்றுக்கொடுக்க முடியும் என்று கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ச-6)

## கேள்வி அறிவித்தல்

### வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)
### மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை - 2023

01. வலிகாமம் வடக்குபிரதேச சபை மாகாணக் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை கொண்டு கீழ்க் காட்டப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களுக்கு கொடுப்பனவிற்கென பயன்படுத்த உத்தேசித்துள்ளது.
02. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாக கேள்வி கோரப்படுகின்றது. ஆயினும் நிதி அமைச்சினால் வெளியிடப்பட்ட 03/2020 (i) ஆம் இலக்க 11.01.2021 ஆந் திகதிய 04/2016(ii) ஆம் இலக்க 08.05.2019 ஆந் திகதிய மற்றும் 04/2016 (iii) ஆம் இலக்க 18.02.2021 ஆந் திகதிய மற்றும் 04/2016(iv) இலக்க 09.02.2023 ஆந் திகதிய பொதுநிதிச் சுற்றறிக்கைகளுக்கு அமைவாக வேண்டப்படும் உரிய தரத்தை கொண்டிருப்போருக்கும் முன்னுரிமையளிக்கப்படும்.
03. தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை(கொல்லங்கலட்டி) வடமாகாணம், தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளைக் கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வீதி புனரமைப்பு வேலைகளுக்காக கோருகின்றார்.
04. கேள்விதாரர்கள் நிர்மாணதொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், குழாய் நீர் விநியோகம் விஸ்தரிப்பு செய்வதற்கு பொருத்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தினைப் பதிவு செய்தவராகவும் கறுப்புப்பட்டியலில் பெயர் இடம்பெறாதவராயும் இருத்தல் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் **தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை (கொல்லங்கலட்டி)** தொலைபேசி:- 0212241130, தொலைநகல்:-0212243688இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 20.07.2023 ஆம் திகதியிலிருந்து 10.08.2023 வரை காலை 09.00 மணி முதல் 14.00 மணிவரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கிலமொழியில் தலைவர், பெறுகைக்குழு, வலிகாமம் வடக்குபிரதேசசபை, காங்கேசன்துறை எனும் இடத்திலிருந்து 20.07.2023 ஆம் திகதியிலிருந்து 10.08.2023வரை காலை 9.00 மணிக்கும் 14.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 3000.00 செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படவேண்டும்.
08. கேள்வி இரு பிரதிகளில் தயாரித்து தலைவர் பெறுகைக்குழு, வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை எனும் முகவரிக்கு 10.08.2023 ஆம் திகதி 14.30 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கப்பட வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படவேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்விநேரம் முடிவடைந்த உடனேயே வருகைதரும் கேள்விதாரர் / பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
09. கேள்விப் பிணைவைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

| இல | ஒப்பந்த இலக்கம் | வேலைவிபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியனில்) | ஒப்பந்த காலம் | வேண்டப் படும் தரம் | கேள்வி சமர்ப்பிக்கப் படும் இறுதித் திகதியில் இருந்து கேள்வி செல்லுபடியாகும் காலம் | | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | செல்லுபடியாகும் நாட்கள் | திகதி | பிணை வைப்பு | செல்லுபடியாகும் காலம் |
| 01 | NP/14/41(14)/ 05/01/271/ PSDG/01/2023 | குழாய் நீர் விநியோகம் விஸ்தரிப்பு செய்தல்- சேந்தான்குளம் | 3.948 | 60 நாட்கள் | C9,C8&C7 நீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் | 63 நாட்கள் | 12.10.2023 | 40,000.00 | 09.11.2023 |

10. கேள்வி கோரல் பற்றிய முன்கூட்டிய கூட்டம் 03.08.2023 ஆம் திகதி மு.ப.10.00 மணிக்கு வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை அலுவலக மாநாட்டுமண்டபத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்துகொள்ளமுடியும்.

**திரு.சு.சுதர்ஜன்,**
**தலைவர்,**
**உள்ளூர் அதிகார பெறுகைச்சபை,**
**வலிகாமம் வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை**

(CR/3728

# மட்டு. நகரில் ஆர்ப்பாட்டம் இருவர் மீது தாக்குதல்!

## மூவர் கைது; 10 பேர் தலைமறைவு

மட்டக்களப்பு, ஜூலை 20

மட்டு. நகரில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமொன்றில் இருவர் தாக்கப்பட்டமை தொடர்பில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். 10 பேர் தலைமறைவாகியுள்ளனர் என்று மட்டு. தலைமையகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அனுமதிப் பத்திரமின்றி சேவையில் ஈடுபடும் தனியார் போக்குவரத்து பேருந்துகளை தடுக்குமாறு எதிர்ப்பு தெரிவித்து மட்டு. தனியார் பேருந்து தரிப்பு நிலையத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. இதில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியனும் பங்கேற்றார்.

இதன்போது அங்கிருந்த சாரதியொருவர் உட்பட இருவர் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். தாக்குதலுக்குள்ளானவர்கள் செய்த முறைப்பாட்டுக்கமைய 3 சந்தேகநபர்கள் நேற்றுமுந்தினம் செவ்வாய்க்கிழமை கைதுசெய்யப்பட்டனர். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்



தோற்றம் 16 . 12 . 1971

மறைவு 19 . 07 . 2023

## கந்தையா மோகனகிருஷ்ணன்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், நயினாதீவை வசிப்பிடமாகவும், சண்டிலிப்பாயை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா மோகனகிருஷ்ணன் நேற்று (19.07.2023) புதன்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் கந்தையா - செல்வலட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும், சண்முக வடிவேல் - பரமேஸ்வரி தம்பதிகளின் அன்பு மருமகனும், தேவிகாவின் அன்புக் கணவரும், சோபனா (மாணவி, யாழ். இந்து மகளிர் கல்லூரி), சதோஸ் (மாணவன்- யாழ். இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், புஸ்பேஸ்வரி (ஆசிரியை) ,சேதுலிங்கம் (ஆசிரியர்), கோகுலவாணி, துர்க்கா (பரா- ஆசிரியை), கோமதி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2023) வியாழக்கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் (சண்டிலிப்பாய்) நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு, சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கம்மாலை வீதி,
சண்டிலிப்பாய் மத்தி, சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

சகோதரன் - 075 047 8608

(CS 25567)AH-1

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் 21 . 05 . 1933

மறைவு 31 . 07 . 2022

## திருமதி தேவபதி (திலகவதி) சிவசுப்பிரமணியம்

திதி: திருதியை (20.07.2023)

அன்புடன் அரவணைத்து
ஆயிரம் கதைபேசி
இன்னுரை பல கூறி - எமை
வளர்த்த எம் குல விளக்கே!
எம்மோடு வாழ்ந்த காலம்
முடிவுற்றுப் போனாலும் - உங்கள்
முகம் எந்நாளும் உயிர் வாழும் - நீங்கள்
விண்ணுலகம் சென்று ஓராண்டு ஆனாலும்
கண்ணை விட்டு மறையாது உங்கள் நினைவுகள்

உங்கள் ஆத்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம் !

24/4, சிவப்பிரகாசம் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்
077 988 9276

(cs 51273) (N.1)

# மரண அறிவித்தல்

## அருளம்பலம் குகதாஸ் (A.M. தாஸ்)

(கட்டட நிர்மாண பணிப்பாளர் - Abdulsaheb Alfardan Construction, Bahrain)



பிறப்பு 13.10.1968

இறப்பு 30.06.2023

யாழ்ப்பாணம் வேலணையைப் பிறப்பிடமாகவும் Bahrain ஐ வதிவிடமாகவும் கொண்ட அருளம்பலம் குகதாஸ் கடந்த (30.06.2023) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அருளம்பலம் (சின்னையா ஆசாரி) மனோன்மணி தம்பதியரின் அன்புப் புதல்வனும், புஸ்பராணி (சந்திரா), காலஞ்சென்ற தவமணிதேவி (தவம்) மற்றும் சகுந்தலா (சசிலா), சண்முகதாஸ் (ராசன்), மணிமேகலை (மஞ்சு - ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், சண்முகநாதன், சரவணபவன், காலஞ்சென்ற குணானந்தசீலன் (சீலன்) மற்றும் சசிகலா (கலா), புவிச்சந்திரன் (ராயூ - ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், துஷ்யந்தி (விஜி -பிரான்ஸ்), சதீஸ்காந் (கட்டார்), உஷாந்தி, நிலக்ஷன் (அவுஸ்திரேலியா), கோபிகா, தீபிகன், சாயித், ஆதியா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாயீஷன், கஜனிகா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும், விஜேந்திரன் (பிரான்ஸ்), மயூரன், கபிதா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.07.2023) வெள்ளிக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாளயம்பதி இந்து மயானத்திற்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலணை மேற்கு,
வேலணை (6 ஆம் வட்டாரம்)

தகவல்:
குடும்பத்தினர்
077 468 0344, 076 165 3322
077 252 0167,076 379 9678

(cr.37276) (N-1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 . 04 . 1967 | 19 . 07 . 2023 |



## திருமதி கேதீஸ்வரி ஜெயக்குமார்

நயினாதீவு 7ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, இணுவிலை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கேதீஸ்வரி ஜெயக்குமார் நேற்று (19.07.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் ஜெயக்குமார் ( உரிமையாளர் - ஜெயந்தா அரைக்கும் ஆலை , இணுவில்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சொர்ணலிங்கம் சரஸ்வதி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான இரத்தினம் மகேஸ்வரி (மல்லாகம்) தம்பதிகளின் அன்பு மருமகளும், லோகேஸ்வரன் (ஓய்வு பெற்ற அதிபர், யாழ். நாயன்மார் கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்), ரதீஸ்வரி (ஆசிரியை, யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், விக்கினேஸ்வரி, காலஞ்சென்றவர்களான சிறீதரன், இரஞ்சிதமலர் மற்றும் உதயகுமார், செல்வகுமார், இறயனி, சதீஸ்குமார் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

மானிப்பாய் வீதி,
இணுவில்.

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்தின் நிர்வாகக் கிளையில் அலுவலக உதவியாளராகக் கடமையாற்றும் திரு.ஜோ.ஞானச்சந்திரனின் பாசமிகு தாயார்

## ஜோவான் மாதி

அவர்கள் கடந்த (2023.07.15) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரது ஆத்மா சாந்தியடைய பிரார்த்திப்பதுடன் அவரது பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

நலன்புரிச் சங்கம், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

(CR37275) AH-1

# மரண அறிவித்தல்



## அருட்பணி ஞானப்பிரகாசம் பீற்றர்

பிறப்பு : 19.10.1961
குருத்துவம் : 30.07.1991
இறப்பு : 19.07.2023

யாழ்ப்பாணம் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணி ஞானப்பிரகாசம் பீற்றர் அடிகளார் கடந்த (19.07.2023) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் உடலம் நாளை (21.07.2023) வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிமுதல் யாழ். ஆயர் இல்ல சிற்றாலயத்தில் இறை மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்படும்.

அன்னாரின் இறுதி இரங்கல் திருப்பலி நாளை மறுதினம் (22.07.2023) சனிக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு யாழ் புனித மரியன்னை பேராலயத்தில் நடைபெற்று, யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை குருக்கள், துறவிகள், உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும். அடிகளாரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக இறைவனை மன்றாடுவோம்.

தகவல்:
அருட்பணி ப.யோ.ஜெபரட்ணம்
குருமுதல்வர்

ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்.

CR 37283) (N 1)

# மரண அறிவித்தல்

## தம்பிராசா தருமரத்தினம்

(உரிமையாளர்-சென்றல் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம், சங்கர் மோட்டோர்ஸ், சுன்னாகம்)



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 17.05.1957 | 18.07.2023 |

சண்டிலிப்பாய் மத்தி சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராசா தருமரத்தினம் அவர்கள் நேற்று முன்தினம் (18.07.2023) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிராசா கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும், இராசேந்திரம் அன்னலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகனும், சறோஜாதேவி அவர்களின் பாசமிகு கணவரும், கஜரதன் (சென்றல் மோட்டோர்ஸ்), பத்மாஜினி, சுபாசினி (மாணவி - ஊவா வெல்லச பல்கலைக்கழகம்), சங்கயன் (சங்கர் மோட்டோர்ஸ்), சிவதர்சினி, கஜறூபன் ஆகியோரின் அன்புத் தந்தையும், விதுஷா, டினேஸ் (LOLC Finance) ஆகியோரின் அன்பு மாமனாரும், டிபிக்சனின் அன்புப் பேரனும், பாலசுப்பிரமணியம், சிவபாக்கியம், அமரர் சிவகுருநாதன், சிவராசா, குணராசா, கமலாதேவி, விமலாதேவி, மல்லிகாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், விக்கினேஸ்வரன் - கவிப்பிரியா, சிவகாந்தன் - தமிழ்ச்செல்வி மற்றும் புஸ்பராணி, அமரர் நாகமுத்து, கலாவதி, சரோஜாதேவி, வேபி, நாகராசா, சிவசக்திநாதன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2023) வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சண்டிலிப்பாய் மத்தி,
சண்டிலிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

T.P: 077 145 8406, 077 664 2897

(CS 25571) 1-6

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** மகிழ்ச்சி தரும் நாள். உறவினர்களுடன் ஏற்பட்டிருந்த மன வருத்தம் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும். மகிழ்ச்சி உண்டாகும்.

**இடபம்:** பல வகைகளிலும் அனுகூல மான நாள். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். காரியம் இழுபறியாகி முடியும். செலவுகளை சமாளித்துவிட முடியும்.

**மிதுனம் :** உற்சாகமானநாள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். குடும்பத்தில் பெரியவர்களின் ஆலோசனை பயனுள்ளதாக இருக்கும். சோர்வு நீங்கி உற்சாகம் பெறுவீர்கள்.

**கடகம்:** அவ்வப்போது மனதில் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். தாய்வழியில் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும். உறவினர்களால் குடும்பத்தில் தேவையற்ற குழப்பங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**சிம்மம்:** புதிய முயற்சி சாதகமாக முடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. எதிர்பார்த்த உதவி கிடைக்கும்.

**கன்னி:** பல வகைகளிலும் அனுகூல மான நாளாக இருக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதர வகையில் எதிர்பார்த்த உதவி கிடைப்பது தாமதமாகும். எதிரிகளால் இடையூறுகள் நீங்கும்.

**துலாம்:** எதிலும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டிய நாள். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நல்லது. பேசும்போது பொறுமையைக் கடைப் பிடிக்கவும். மனவருத்தம் ஏற்படும்.

**விருச்சிகம்:** புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வழக்கமான பணிகளிலும் கூடுதல் கவனம் தேவை. பொறுப்புகளின் காரணமாக அலைச்சல் ஏற்படக்கூடும். சங்கடங்கள் ஏற்படும்.

**தனுசு:** சிந்தித்துச் செயற்படவேண்டிய நாள். கணவன் – மனைவிக்கிடையே கருத்துவேறுபாடு ஏற்படக்கூடும். நண்பர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மகரம்:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். முக்கியமான முடிவுகளைத் துணிந்து எடுப்பீர்கள். எதிர்பார்த்த உதவி கிடைக்கும். செலவுகள் அதிகரித்தாலும் சமாளித்துவிட முடியும்.

**கும்பம்:** நீண்டநாள்களாக எதிர்பார்த்து ஏமாந்த பணம் இன்று கைக்கு வந்து மகிழ்ச்சி தரும். மனக்கசப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளது. அனுசரணையாக நடந்துகொள்ள முயற்சி செய்யவும்.

**மீனம்:** எதிலும் பொறுமை அவசியம். புதிய முயற்சிகள் இழுபறியாகும். அடிக்கடி மனதில் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். வீட்டில் பொறுப்புகள் அதிகரிக்கும்.



## பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 20
பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று வியாழக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு கிளிநொச்சி மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் புதிய நிர்வாகசபை உறுப்பினர்கள் தெரிவு இடம்பெறவுள்ளதால் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ய)

## கௌரவிப்பு

கொடிகாமம் ஜூலை 20
நாவற்குழி மகா வித்தியாலயத்தில் 1982 தொடக்கம் 1992ஆம் ஆண்டு காலப் பகுதியில் கல்வி கற்ற க.பொ. த.சாதாரண தர மாணவர்களால் 30 ஆண்டுகள் கடந்து ஒருங்கிணைந்து நடத்தும் ஆசான்களைப் போற்றி கௌரவிக்கும் நிகழ்வு எதிர்வரும் 30ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை நாவற்குழி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. (ய-159)




## சங்கானையில் பசுமைப் புரட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 20
சுழிபுரம்மேற்கு கலைமகள் விளையாட்டு கழகத்தினரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை பசுமைப் புரட்சி செயற்றிட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

சுமார் 20 வருடங்களுக்கு மேலாக உயர்பாதுகாப்பு வலயமாக இருந்து 2012 ஆம் ஆண்டு இலங்கைக் கடற்படையினரால் விடுவிக்கப்பட்ட நிலப்பரப்பில் சுழிபுரம்மேற்கு குகன்குல சங்கத்தால் சுழிபுரம்மேற்கு கலைமகள் விளையாட்டுக்கழகத்துக்காக வழங்கப்பட்ட 4ஏக்கர் காணியில் இந்தச் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இந்தச் செயற்றிட்டம் பசுமை தரு மரக்கன்றுகள், பிரதான விளையாட்டு அரங்கம் மற்றும் சுற்றுவேலிகள் எனப் புலம்பெயர் தேச மற்றும் சுழிபுரம்மேற்கு வாழ் மக்களின் நிதிப்பங்களிப்புடன் இடம்பெறவுள்ளது. (ஒ-ரி-125)

## யாழ்ப்பாணக் கல்லூரியில் அஞ்சலுறை வெளியீடு!




யாழ்ப்பாணம், ஜூலை 20
வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆவது ஆண்டை முன்னிட்டு விசேட தபால் முத்திரை மற்றும் அஞ்சலுறை வெளியீட்டு நிகழ்வு நேற்று மாலை 4 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பாடசாலை அதிபர், முன்னாள் அதிபர்கள், தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி பத்மதயாளன் ஆகியோர் முத்திரை மற்றும் அஞ்சலுறையைப் பெற்றுகொண்டனர்.

இந்த நிகழ்வில் இலங்கை தபால்மா அதிபர் றுவான் சத்குமார விசேடமாக வடிவமைக்கப்பட்ட முத்திரை மற்றும் அஞ்சலுறையை வெளியிட்டு வைத்தார். (ஒ-ரி-125)

## நாடகமும் அரங்கியலும் பட்டறை

யாழ்ப்பாணம், ஜூலை 20
திருமறைக் கலாமன்றத்தின் ஏற்பாட்டில் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் நாடகமும் அரங்கியலும் பாடத்தில் செய்முறைப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பயிற்சிப் பட்டறை எதிர்வரும் ஜூலை 22ஆம், 23 ஆம் திகதிகளில் (சனி மற்றும் ஞாயிறு) காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரை கலைத்தூது கலையகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பாக தமது பெயர், விவரங்களை யாழ். திருமறைக் கலாமன்ற அலுவலகத்தில் பதிவு செய்ய முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 021 222 2393 மற்றும் 077 6393620 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-ரி2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படகுப் போக்குவரத்து தொடர்பில் ரணில் – மோடி கலந்துரையாடல்!

கொழும்பு, ஜூலை 20

**இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான, படகுப் போக்குவரத்துத் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இந்தியப் பிரதமர் மோடிக்கும் இடையிலான சந்திப்பின்போது கலந்துரையாடப்படவுள்ளது.**

கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகம் இந்தத் தகவலை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தியக் கப்பல் போக்குவரத்து மற்றும் துறைமுகங்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் ராஜேஷ்குமார் சின்ஹா, இலங்கை கப்பல் போக்குவரத்து மற்றும் துறை முகங்கள் விமான போக்குவரத்து அமைச்சின் செயலாளர் ருவான் சந்திரா ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றவுள்ளனர்.

2011 ஆம் ஆண்டு இரு நாடுகளுக்குமிடையே உருவாக்கப்பட்ட பயணிகள் கடற்போக்குவரத்து புரிந்துணர்வு உடன்படிக்கை அண்மையில் மீளமைக்கப்பட்டது.

கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப் படவிருந்த பயணிகள் படகுச் சேவை இந்தியத் துறைமுகத்தைத் தெரிவு செய்வதில் ஏற்பட்ட தடங்கல் காரணமாக தாமதமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-6)




## வீடமைப்புக் கடன்களில் ரூ.7.8 மில்லியன் மோசடி

### விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜூலை 20

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்ட வீடமைப்புக் கடன்களில் சுமார் 7.8 மில்லியன் மோசடி இடம்பெற்றுள்ளது எனக் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிக்கையில்;

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையில் கடமையாற்றும் 11 அதிகாரிகளால் இந்த மோசடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கண்டி, காலி, புத்தளம், குருநாகல், அம்பாந்தோட்டை மாவட்டங்களில் வீடமைப்புக் கடன்களில் மோசடி செய்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மோசடியாளர்களாக இனங்காணப்பட்டோர் கைதுசெய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக விசாரணை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வீடமைப்புத் திட்டங்கள் மீண்டும் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். (ச-6)

## பருத்தித்துறை – தெல்லிப்பழையில் கண்புரை தெரிவு முகாம் சனியன்று

தெல்லிப்பழை, பருத்தித்துறை பகுதிகளில் கண்புரை சத்திரசிகிச்சை செய்யவேண்டிய தேவையுள்ள நோயாளர்களைத் தெரிவு செய்யும் இலவச கண் பரிசோதனை முகாம் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட நோயாளர்களுக்கு பருத்தித்துறை ஆரம்ப சுகாதார மருத்துவப் பிரிவிலும் தெல்லிப்பழை பிரதேசசெயலக பிரிவுக்குட்பட்ட நோயாளர்களுக்கு இளவாலை பிரதேச மருத்துவமனையிலும் இந்த முகாம் இடம்பெறவுள்ளது.

குறித்த முகாமில் கண்புரை சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்படும் நோயாளர்களுக்கான சத்திரசிகிச்சை மேற்கொள்ளும் திகதி பின்னர் அறியத்தரப்படும்.

கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ள வேண்டிய தேவையுடைய நோயாளர்களைப் பரிசோதனை முகாமில் பங்கேற்குமாறு யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார். (ச-ரி2-27)

## பள்ளத்தில் வீழ்ந்து பஸ் தடம்புரள்வு!

### சாரதி சாவு!

### எண்மர் காயம்



கொழும்பு, ஜூலை 20

தனியார் பேருந்து வீதியை விட்டு விலகி பள்ளத்தில் வீழ்ந்து விபத்துக்குள்ளானதில் சாரதி உயிரிழந்ததுடன் 8 பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்து எல்ல கரதகொல்ல - ரக்கித்தாகந்த வீதியில் இடம்பெற்றுள்ளது. உமாஓயா வேலைத்திட்டப் பணிக்காக பணியாளர்களை ஏற்றிச் சென்ற பேருந்தே விபத்துக்குள்ளாகியுள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வெல்லவாய பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-ரி3)

## ரஷ்ய சுற்றுலாவிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, ஜூலை 20

ரஷ்யாவிலிருந்து கடந்த பத்து மாதங்களில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் முதல் இலங்கைக்கும் ரஷ்யாவுக்கும் இடையிலான நேரடி விமானசேவை மூலம் அவர்கள் நாட்டை வந்தடைந்துள்ளனர். நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாத்திரம் சுமார் 290 ரஷ்ய சுற்றுலாப் பயணிகள் நாட்டை வந்தடைந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ச-ரி3)



# பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் விரைவில் விரிவான ஆராய்வு!

## தமிழ்க் கட்சிகளிடம் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 20

பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொடர்பில் விரைவில் கலந்தாய்வு நடத்தப்படும். அதன் பின்னர் அது மீண்டும் வர்த்தமானியிடப்படும் என்று ஜனாதிபதி ரணில் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கும் தமிழ்க் கட்சிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. இந்தக் கலந்துரையாடலில் கருத்துத் தெரிவிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார் என்று ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு அறிக்கையிட்டுள்ளது.

அந்த அறிக்கையில் உள்ளதாவது:-தமிழ்க் கட்சிகளுடனான சந்திப்பில், பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தொடர்பில் விரைவில் முழுமையான கலந்துரையாடலொன்று நடத்தப்படும் என்றும், அதன் பின்னர் தேவைப்படும் திருத்தங்களுடன் அது வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

உண்மை மற்றும் நல்லிணக்கம் தொடர்பாக இடைக்கால ஆணைக்குழுவொன்றை நியமிப்பது, அதற்கு பணிப்பாளர் நாயகம் ஒருவரை நியமிப்பதுடன் உத்தியோகத்தர்களை நியமிப்பது போன்ற விடயங்களும் இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டுள்ளன. உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு சட்டவரைவு விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

வடக்கின் அபிவிருத்தி பற்றிய விடயங்களும் இந்தச் சந்திப்பின்போது ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம், மன்னார் மாவட்டங்களின் சுற்றுலாத் தலங்களை அபிவிருத்தி செய்வது, பூநகரியை மீள புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தி நகரமாக அபிவிருத்தி செய்வது, வன்னியில் தென்னை பயிர்ச்செய்கையை அபிவிருத்தி செய்தல், யாழ்ப்பாணத்தை ஒரு முன்னோடி பசுமைக்குழக நகரமாக மாற்றுவது போன்ற விடயங்களும் சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டன - என்றுள்ளது. (ம-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம்**
**உரும்பிராய்**

**பொதுச்சபைக் கூட்டமும்**
**புதிய பரிபாலனசபைத் தெரிவும்**
**06.08.2023**

மேற்படி ஆலயத்தின் பொதுச்சபைக் கூட்டமும் புதிய பரிபாலன சபைத் தெரிவும் எதிர்வரும் (06.08.2023) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு திரு.ஜ.சிவபாலசுந்தரம் அவர்களது தலைமையில் ஆலய மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அத்தருணம் மகாசபை உறுப்பினர்கள் அனைவரும் கலந்து கொண்டு புதிய பரிபாலன சபைத் தெரிவுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**குறிப்பு:-**

பிரேரணைகள் எதுவும் சமர்ப்பிக்க விரும்பும் உறுப்பினர்கள் தங்களது பிரேரணைகளை பொதுச்சபைக் கூட்டத்துக்கு 14 நாட்களுக்கு முன் கிடைக்கக்கூடியவாறு **செயலாளர், ஓடையம்பதி கற்பக விநாயகர் ஆலயம், உரும்பிராய்** எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**20.07.2023**

**ப.சேயோன்**
**செயலாளர்**

(CS 25572)4-1

## குருந்தூர்மலைக்...

முன்னாள் இராணுவத்தளபதி ஜெகத் டயஸுடன் இணைந்து பிரிகேடியர் அத்துல ஹேமச்சந்திர டீ சில்வா, கேணல் அனில் சுமேத அமரசேகர ஆகியோரும் இந்த மனுவைத் தாக்கல் செய்துள்ளனர்.

இந்த மனுவில் தொல்பொருள் திணைக்களச் செயலாளர் சோமரத்ன விதான பத்திர, தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் அநுர மாரசிங்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

குருந்தூர்மலையில் உள்ள ஆதிசிவன் ஐயனார் ஆலயம் தமிழ் மக்களின் பூர்வீக வழிபாட்டுத் தலமாகும். தற்போது குருந்தூர்மலைப் பகுதி தொல்லியல் திணைக்களத்தால் பொறுப்பேற்கப்பட்டு, தொல்லியல் பிரதேசமாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ் மக்களின் வழிபாட்டுக்குத் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்தப் பகுதியில் கட்டுமானங்கள் எவையும் மேற்கொள்ளக்கூடாது என்று முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றம் வழங்கிய கட்டளையை மீறி, தமிழ் மக்களின் வழிபாட்டு இடம் அழிக்கப்பட்டு புதிதாக விகாரை ஒன்று பாதுகாப்புத் தரப்பின் ஆதரவுடன் கட்டப்பட்டது.

நீதிமன்றக் கட்டளையை மீறித் தொல்லியல் திணைக்களத்தின் அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் பௌத்த மயமாக்கலுக்கு தமிழ் மக்கள் தொடர்ச்சியாக எதிர்ப்பை வெளிக்காட்டிவரும் நிலையில், இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கவனத்துக்கும் கொண்டு செல்லப்பட்டது. இந்த விடயத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூறியிருந்தபோதும், சில நாள்களுக்கு முன்னர் குருந்தூர் மலைக்கு வழிபடச் சென்ற தமிழ் மக்களைப் பொலிஸார் பலப்பிரயோகம் செய்து திருப்பி அனுப்பியிருந்தனர்.

இந்தநிலையில், குருந்தூர்மலையைச் சுற்றியுள்ள பிரதேசங்களில் தமிழ் மக்களுக்கு காணிகளை வழங்கக்கூடாது என்று இறுதிப்போரில் 57 ஆவது படைப் பிரிவின் கட்டளைத்தளபதியாகப் பதவி வகித்த ஜெகத் டயஸால் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குருந்தூர்மலையைச் சுற்றியுள்ள 300 ஏக்கர் காணிகளில் அகழ்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், அதனால் அந்தக் காணிகளைத் தமிழ் மக்களுக்கு வழங்கக் கூடாது என்றும் அந்த மனுவில் குறிப்பிட்டுள்ளனர்.

கிழக்கு மாகாணத்தில் ஜனாதிபதி செயலணியால் அடையாளமிடப்பட்ட தொல்பொருள் மரபுரிமைச் சின்ன எல்லைக் கற்களைத் தொடர்ந்து பாதுகாக்க வேண்டும் என்றும் அந்த மனுவில் கோரப்பட்டது.

இறுதிப்போரின்போது ஜெகத் டயஸ் தளபதியாகப் பதவி வகித்த 57 ஆவது படைப்பிரிவின் மீது பல்வேறு குற்றச்சாட்டுகளை சர்வதேச அமைப்புகள் கடந்தகாலங்களில் முன்வைத்திருந்தன. இறுதிக்கட்டப் போரின்போது நடந்த மோசமான மனித உரிமை மீறல்களுடன் இலங்கை இராணுவத்தின் 57ஆம் படையணி தொடர்புபட்டிருந்தது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் சுட்டிக்காட்டியிருந்தது. 2013ஆம் ஆண்டில் அவுஸ்திரேலியாவும் அமெரிக்காவும் போர்க்குற்ற குற்றச்சாட்டுகள் காரணமாக ஜெகத் டயஸுக்கு நுழைவிசைவு மறுத்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

(அ-எ-6)

## வவுனியா...

தகவல் வழங்கப்பட்டு, அவர்கள் சம்பவ இடத்துக்கு வந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

தீ விபத்துக்குக் காரணம் எரிவாயு சிலிண்டர் வெடிப்பாக இருக்கலாம் என்று சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-எ-18)

## எழுந்தது...

சம்பவம் நேற்று நடந்துள்ளது.

சிங்கப்பூரில் இருந்து வந்த இந்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்க முயன்றபோது, விமானி பாதுகாப்புக் கருதி திடீரென விமானத்தை மேலே உயர்த்த வேண்டி நேரிட்டுள்ளது.

அப்போது விமானத்தின் இயந்திர அதிர்வு மற்றும் வெளியான பலத்த காற்றுக் காரணமாக விமான நிலையத்துக்கு அருகில் இருந்த வீடுகளின் கூரைகள் பறந்துள்ளன.

அந்த விமானத்தினுள் 292 பயணிகளும், 12 விமான ஊழியர்களும் பயணித்தனர். இவ் விமானத்தின் ஒரு இயந்திரம் 75 ஆயிரம் குதிரைவலுசக்தி கொண்டது. இந்த விமானம் இரு இயந்திரங்களைக் கொண்டது.

விமான நிலையம் தொடக்கம் கடவல மங்கலாராம விகாரை வரையான 5 கிலோமீற்றர் நிலப் பிரதேசத்தில் அமைந்துள்ள வீடுகள் சொத்துகளுக்கு சேதம் ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-இ)

## இலங்கைக்கு...

இந்த வரிச்சலுகை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடையவுள்ள நிலையில், வரிச் சலுகையை மேலும் 4 ஆண்டுகளுக்கு நீடிக்க ஐரோப்பிய ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

புதிய ஜி.எஸ்.பி. பிளஸ் முறைமை தொடர்பான கலந்துரையாடல்கள் தொடரும் அதேவேளை, இலங்கை போன்ற நாடுகள் முன்னுரிமை வரிச் சலுகைகளை இழக்காது என ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் இலங்கை ஐரோப்பிய ஒன்றியத்துக்கு 3.2 பில்லியன் யூரோ மதிப்பிலான ஏற்றுமதிகளை செய்துள்ளது என்று இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதி அலுவலகம் தெரிவித்துள்ளது.

முன்னதாக இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாதச் சட்டம் இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்றும் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப அது மாற்றியமைக்கப்பட வேண்டும் என்றும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியிருந்தது. இலங்கை அரசாங்கம் அவ்வாறு செயற்படாவிட்டால் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையில் அது தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் கடந்த காலங்களில் ஐரோப்பிய ஒன்றியம் எச்சரித்திருந்தது. இருந்தபோதும் தற்போது வரிச்சலுகையை மேலும் 4 ஆண்டுகள் நீடிப்பது என்று ஐரோப்பிய ஒன்றியம் நேற்றுத் தீர்மானித்துள்ளது. (அ-எ-இ)

## எதிர்ப்பின்றி...

களுடன் நிறைவேற்றப்பட்டது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் யோசனைக்கு அமைய கடந்த 6 ஆம் திகதி குறித்த சட்டவரைவு சபையில் சமர்ப்பிக்கப்பட்டது. அதில் 193 திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, நேற்று சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

இந்த ஊழல் எதிர்ப்புச் சட்டம் தெற்காசியாவிலேயே சிறந்தது என்றும், இதன்மூலம் ஊழலுக்கு எதிராகக் கடும் நடவடிக்கைகள் எடுக்கமுடியும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-எ-22)

## '13' என்னும்...

காண்பதற்கு இந்தியா தலைமை ஏற்க வேண்டும் என்று நாடு கடந்த தமிழீழ அரசு கோரிக்கை விடுத்துள்ளது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதானி வீ.உருத்திரகுமாரன் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்தக் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்தியா செல்லும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை இந்தியப் பிரதமர் நரேந்திரமோடியைச் சந்திக்கவுள்ள நிலையில், நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் இந்தியப் பிரதமருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

இராணுவப் பலம் மற்றும் பொருளாதாரப் பலம் ஆகியவற்றின் அடிப்படையில் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான சமச்சீரற்ற உறவை சமன் செய்ய இலங்கை மோசமான இராஜதந்திரத்தையும், போலித்தனத்தையும் பயன்படுத்துகின்றது என்று அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கையின் அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தின் மூலம் இந்தியாவைச் சிக்கவைக்கும் இலங்கையின் வெற்றிகரமான நகர்வுகளை அனுமதிக்க வேண்டாம் என்றும், ஈழத் தமிழர்களிடையே சர்வதேசத்தின் ஆதரவுடன் இந்தியா வாக்கெடுப்பு நடத்துவதன் ஊடாகத் தமிழ்த் தேசியப் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்கவேண்டும் என்றும் அந்தக் கடிதத்தில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

(அ-எ-இ)

## பொலிஸுக்கு...

கடந்த வருடம் மே மாதம் 9 ஆம் திகதி இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களைத் தடுக்க பொலிஸ் திணைக்களம் தவறியதன் காரணமாக இலங்கைப் பிரஜைகளின் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளது என்று தெரிவித்து பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு நேற்று உயர்நீதிமன்றத்தால் தள்ளுபடி செய்யப்பட்டது.

இலங்கையில் இடம்பெற்ற வன்முறைகளைத் தடுக்கவோ அல்லது அதற்கு எதிராக போதுமான நடவடிக்கைகளை எடுக்கவோ தவறியதன் மூலம் இலங்கை பொலிஸ் திணைக்களம் மக்களின் மனித உரிமைகளை மீறியுள்ளது என்று தெரிவித்து 'உயிர் உரிமை' மனித உரிமைகள் மையத்தால் மனுத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அரச சட்டத்தரணி ஷமிந்த விக்ரமவால் முன்வைக்கப்பட்ட ஆரம்ப ஆட்சேபனைகளை பரிசீலித்த உச்ச நீதிமன்ற நீதிபதிகள் எஸ்.துரைராஜா, யசந்த கோட்டகொட மற்றும் அர்ஜுன ஒபேசேகர ஆகிய மூவரடங்கிய நீதியரசர்கள் குழாம் மனுவைத் தள்ளுபடி செய்தது. (அ-எ-இ)

## மருத்துவமனை...

ஏற்பட்ட மரணங்கள் சிலவற்றுக்கு தரமற்ற மருந்துகளே காரணம் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. மருந்துகள் ஏற்றப்பட்ட சிறிது நேரத்தில் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன என்று உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கூறுகின்றனர். இந்த விவகாரம் பெரும் சர்ச்சையாகியுள்ள நிலையில், நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் முன்வைத்த வாதங்களுக்குப் பதிலளித்தபோது சுகாதார அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல மேற்கண்டவாறு பதிலளித்துள்ளார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

ஒரு இலட்சம் பேர் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனைக்குச் சென்றால் அவர்கள் அனைவரும் குணமடைய மாட்டார்கள். அதனால்தான் மருத்துவமனைகளுக்கு அருகில் மலர்ச்சாலைகள் அமைக்கப்படுகின்றன. இதுவே உண்மை.

கண்டி மருத்துவமனையில் உயிரிழந்த யுவதிக்கு ஏற்றப்பட்ட தடுப்பூசி இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டு சுமார் 20 ஆண்டுகள் ஆகின்றன. அந்தத் தடுப்பூசி ஏற்றப்பட்ட இன்னும் 12 பேர், யுவதி தங்கியிருந்த மருத்துவமனை விடுதியில் தற்போதும் இருக்கின்றனர் - என்றார். (அ-எ-இ)

## தனியார்...

தாக்குதல் முயற்சி ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. இந்தச் சம்பவம் இரவு 7.30 மணியளவில் நடந்துள்ளது.

மானிப்பாய் - காரைநகர் வீதியில் சுதுமலைச் சந்திப் பகுதியில் பஸ்ஸை வழிமறித்த இனந்தெரியாத கும்பல் ஒன்று பஸ்ஸின் கண்ணாடியை உடைத்ததுடன், சாரதி, நடத்துநர் மீதும் தாக்குதல் நடத்தியது என்று கூறப்படுகின்றது.

அந்தக் கும்பலிடம் இருந்து தப்பிப்பதற்காக பஸ் சாரதி பஸ்ஸை காரைநகர் நோக்கி செலுத்திச் சென்றார் என்றும், இந்தச் சம்பவம் தொடர்பில் காரைநகர் சிற்றூர்திச் சங்கத்துக்கும் அறிவிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று காரைநகர் சிற்றூர்திச் சங்கம் தெரிவித்தது.

(அ-எ-125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறும்படத்துக்கான பிரதியாக்கப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 20

புதிய அலை கலை வட்டம் நடத்தும் 'எ வோட்ஸ் - 2023' கலை, கலாசார போட்டித் தொடருக்கான குறும்படப் பிரதி ஆக்கப் போட்டி அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டிக்கான நிபந்தனையாக, கதையின் கரு தங்களது சொந்த விருப்பத்துக்கு ஏற்றதாக இருக்கலாம்,

கதைக்கான நேரம் 10நிமிடங்கள் முதல் 50நிமிடங்கள்,

கதை தங்களது தனித்துவமான படைப்பு என்பதையும்

இதில் வேறு தழுவல்கள், சேர்ப்புகள், பிரதிபண்ணல்கள் இல்லை என்பதை உறுதிப்படுத்தவேண்டும்.

கதை மூன்று அங்க அமைப்புகள் (Three Act Structure) எனப்படும் ஆரம்பம், திருப்பம், முடிவு என்பதற்கு ஏற்ப அமைக்கப்படவேண்டும், கதைக்கான பாத்திரங்கள் அவற்றின் செயற்பாடு, காட்சி அமைப்பு அதற்கான இடங்கள் மற்றும் வசனமற்ற காட்சிப்படுத்தல்களின் விவரங்கள், உருவகப்படுத்தப்படும் அம்சங்கள் போன்ற யாவும் எழுத்து வடிவத்தில் அமைந்திருக்க வேண்டும், இந்தக் கதை முன்னர் படமாக்கப் பட்டதாகவோ அல்லது வேறு போட்டிகளுக்கு அனுப்பப்பட்டதாகவோ இருத்தல்கூடாது என்பனவாகும்.

பிரதி கட்டாயம் ரைப் செட்டிங் செய்து அனுப்பப்பட வேண்டும், பேனாவால் எழுதி அனுப்பப்படுபவை ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.

பிரதியை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

பிரதியை puthiyaalaikalaivaddam1980@gmail.com அல்லது 0754880172 என்ற வட்சப் இலக்கத்துக்கும் அனுப்பலாம். நடுவர்களின் முடிவே இறுதியானதாகும்.

இதில் முதலாம் பரிசுக்கு 10 ஆயிரம் ரூபாவும் சான்றிதழும் இரண்டாம் பரிசு 7 ஆயிரத்து 500 ரூபா, மூன்றாம் பரிசாக 5 ஆயிரம் ரூபா என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விவரங்களை 077 6274099, 0777412604, 077111906, 0762002701 ஆகிய தொலைபேசி இலக்கங்களூடாக பெற்றுக்கொள்ளலாம் என ஏற்பாட்டுக்குழு அறிவித்துள்ளது. (ச)


## காணி விற்பனைக்கு

- **இடம்:** ஆலடி ஒழுங்கை ஊரெழு (பலாலி வீதியில் இருந்து 1 Km தூரம்)
- **விஸ்தீரணம் :** 5 1/2 பரப்பு
- **ஏனையவை :** 4 பக்க மதில் மற்றும் வெட்டு கிணறு

(CS 51307) (N.1)

தொடர்பு: 021 222 5534, 077 660 4980

## DHL துரித பொதிகள் சேவை

சகல நாடுகளுக்கும் கடிதங்கள், பொதிகள் 3-5 வேலைநாட்களில் ஒப்படைக்கப்படும்



திருமுருகன் கொம்நெற்

321, K.K.S. Road, Jaffna.

T.P: 0777 55 45 28

## மணமகன் தேவை

01. கொக்குவில் - அல்வாய் இந்து கௌரவகுலம் (V), 1993. ரோகினி. Phd, Assistant Lecturer, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33627
02. கைதடி. இந்து. கௌரவகுலம் (V). 1991. பூசம். MSc, Research Assistant, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34245
03. புலோலி - கரவெட்டி. இந்து. கௌரவகுலம் (V). 1994, திருவாதிரை. Book keeper, Unior Accountant, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 34097
04. உரும்பிராய். இந்து. கௌரவகுலம் (V). 1993. திருவோணம். Masters in Biotechnology, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33574
05. தெல்லிப்பழை - கோண்டாவில். இந்து. கௌரவகுலம் (V), 1993. அச்சுவினி. BSc, கனடா மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 33363
06. பருத்தித்துறை - சாவகச்சேரி. இந்து கௌரவகுலம் (V). 1986. திருவாதிரை. MSc, கனடா மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 32904
07. தெல்லிப்பழை - உரும்பிராய். இந்து கௌரவகுலம் (V). 1988. மிருகசீரிடம். BSc (Hons), MBA, Canada மணமகளுக்கு மணமகன் தேவை. பதிவெண் - 31812

தொடர்புகளுக்கு- S.Sharma J.P Astrologer www.thaalee.com

Phone - 077 539 3728
Whatsapp - 077 803 8193

## மணமகள் தேவை

01. பருத்தித்துறை. இந்து கௌரவகுலம் (V), 1991. புனர்பூசம். MBBS Doctor மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33737
02. சுழிபுரம் - அராலி. இந்து கௌரவகுலம் (V), 1987. அச்சுவினி. Quantity Surveyor, Nigeria Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33612
03. புங்குடுதீவு. இந்து கௌரவகுலம் (V), 1987. அனுசம். Masters of Software Engineering, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 33498
04. திருநெல்வேலி - சாவகச்சேரி. இந்து கௌரவகுலம் (V), 1987. ஆயிலியம். MBBS Doctor மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 34953
05. நல்லூர் -அளவெட்டி. இந்து கௌரவகுலம் (V), 1981. திருவாதிரை. Graduate, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27961
06. பருத்தித்துறை - அச்சுவேலி. இந்துகௌரவகுலம் (V), 1991. சதயம். Graduate Quantity Surveyor மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27903
07. புலோலி. இந்து கௌரவகுலம் (V), 1990. ரோகினி. BBM Finance & MBA, Canada Citizen மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 27898
08. மிருசுவில். இந்து கௌரவகுலம் (V), 1988. திருவோணம். BSc in information Technology, Australia மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 32307
09. சாவகச்சேரி - வேலணை. இந்து கௌரவகுலம் (V), 1990. திருவோணம். BBM, B.Eng, (University of Sunderlan), German Citizen மணமகனுக்கு-மணமகள் தேவை. பதிவெண் - 31102
10. கோப்பாய் - மல்லாகம். இந்து கௌரவகுலம் (V), 1982. சுவாதி. MBBS Doctor, Divorce மணமகனுக்கு மணமகள் தேவை. பதிவெண் - 31058

தொடர்புகளுக்கு- S.Sharma J.P www.thaalee.com திருமணசேவை

Phone - 077 539 3728
Whatsapp - 077 803 8193

(CS/51315)AH-1


## மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 12 . 1954



இறப்பு 19 . 07 . 2023

### திரு.கந்தையா மனோகர்

யாழ்ப்பாணம் அரியாலையை பிறப்பிடமாகவும் இராஜேந்திரா வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா மனோகர் நேற்று (19.07.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லம்மா தம்பதியரின் ஏக புதல்வனும் காலஞ்சென்றவர்களான ஜோன் இராசையா மர்த்தினம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், மேரி எஸ்தர்ராணியின் பாசமிகு கணவரும், யூடினோ மனோஜ் (பிராந்திய சேவை முகாமையாளர் - சிங்கர், வவுனியா), வினுஷினி (பிரான்ஸ்), சறோன் ஹெறிக்ஷன் (பொலிஸ் உத்தியோகத்தர் - காங்கேசன்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜோய் பிரவீனின் பாசமிகு மனோ அப்பாவும், எடின் றிக்ஷமனின் அன்பு மாமனாரும், காலஞ்சென்றவர்களான சின்னமணி, செட்டி மற்றும் குஞ்சுக் கிளி, பேபி, நீலா ஆகியோரின் நேசத்திற்குரிய சகோதரனும், காலஞ்சென்றவர்களான தங்கராணி, புஸ்பராணி மற்றும் போதகர் ஜெயசீலன், ஜெயராணி, பத்மராணி, இந்திராணி, அரியசீலன், அமிர்தராணி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்திலிருந்து நாளை (21.07.2023) வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் யாழ். புனித மரியன்னை பேராலயத்திற்கு திருப்பலிக்காக எடுத்துச்செல்லப்பட்டு, புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்

34/1, இராஜேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

மகன்மார்
மனோஜ் - 077 2259 777
சறோன் - 077 077 4246

(CS 25573) A-1

## மரண அறிவித்தல்

மலர்வு 27 . 01 . 1951



உதிர்வு 19 . 07 . 2023

### இராசையா துரைராஜா (ஜெயம்)

கொக்குவில் மேற்கு ஜயனார் கோவிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட துரைராஜா நேற்று (19.07.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா பாக்கியம் தம்பதிகளின் அன்பு புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் சின்னத்தங்கம் தம்பதிகளின் பாசமிகு மருமகனும், பாலாம்பிகையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான புஸ்பரெத்தினம் சண்முகநாதன், தேவராசா, நேசரெத்தினம், யோகராசா மற்றும் ராஜேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற முத்துவேலு, சுப்பிரமணியம், அருமைநாயகி ஆகியோரின் மைத்துனரும், உதயசங்கர், மேனகா, கௌரி, பிரதீபன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சிவகரனின் அன்பு மாமனாரும், கெவின், பென், கிருஷ், சிவனியா, மகனியா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2023) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனத்திற்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

துரைராஜா உதயசங்கர்
077 507 3484

தகவல்: குடும்பத்தினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.07.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.